REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 ஜூலை 12 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 90 இல. 162 | Tuesday 12, July, 2022 | 12பக்கங்கள் | 40/-

MOBILE TALK TEXT DATA BOOSTER 505
ஒரே பக்கேஜில் TALK TEXT DATA
Voice 1777 நிமிடங்கள்
Text 1777 sms
Data 2GB anytime data
SLTMOBITEL

## ஜுலை 16,17,19ஆம் திகதிகளில்

# மூன்று எரிபொருள் கப்பல்கள் இந்த வாரத்தில் நாட்டுக்கு

### நிதி செலுத்தப்பட்டுவிட்டதாக கஞ்சன தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இந்த வாரத்தில் மூன்று எரிபொருள் கப்பல்கள் நாட்டை வந்தடையும் எனவும் அதற்கான நிதி செலுத்தப்பட்டுள்ளதாகவும் அத்துடன் தற்போதைய எரிபொருளுக்கான நெருக்கடி நிலை ஓரளவு தணியும் என எரிசக்தி மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, டீசல் கப்பலொன்று எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் நாட்டை வந்தடையும்

04

# இருவேறு வீதி விபத்துக்களில் நால்வர் பலி; பலர் காயம்

### படல்கம, கம்பளை பகுதிகளில் சம்பவம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் இருவேறு பகுதிகளில் நேற்றைய தினம் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் நான்கு பேர் பலியாகியுள்ளதுடன் மேலும் பலர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். மரதகஹமுல படல்கம வீதியில் தம்மிட நூல் நிலையத்திற்கு அருகாமையில் நேற்று இடம்பெற்ற

04

# பதவி விலகுவதை பிரதமரிடம் உறுதிப்படுத்தினார் ஜனாதிபதி

### பிரதமரின் ஊடகப்பிரிவு ஊடகங்களுக்கு அறிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாளை 13ஆம் திகதி தமது பதவியை இராஜினாமா செய்யப் போவதாக நேற்று பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இந்த தகவலை நேற்று பிரதமர் அலுவலகம் உத்தியோகபூர்வமாக வெளியிட்டது.

ஏற்கனவே அவர் தமது இராஜினாமா தொடர்பில் சபாநாயகருக்கு அறிவித்திருந்தார். எதிர்வரும் 13ஆம் திகதி தமது பதவியை இராஜினாமா செய்யப் போவதாக அதன்போது தெரிவித்திருந்தார்.

கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை அரசாங்கத்திற்கு எதிராக ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டு மேற்கொண்ட

04

## ஜனாதிபதி கோட்டாபய நாளை 13ஆம் திகதி பதவி விலகியதும்

# புதிய ஜனாதிபதி தெரிவுக்கு 20ஆம் திகதி வாக்கெடுப்பு

### வேட்புமனுக்கள் பொறுப்பேற்பு 15 முதல் 19ஆம் திகதி வரை

### நேற்று இடம்பெற்ற விசேட கூட்டத்தில் கட்சித் தலைவர்கள் தீர்மானம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

புதிய ஜனாதிபதியை எதிர்வரும் 20 ஆம் திகதி நியமிப்பதற்கு நேற்றைய கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை அரசியலமைப்புக்கு அமைய புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கான வேட்புமனுவை தாக்கல் செய்வதற்கும் கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

வேட்புமனு தாக்கல் அடுத்தவார செவ்வாய்க்கிழமையன்று நிறைவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து எதிர்வரும் வாரத்தில் புதன் அல்லது வியாழக்கிழமை பாராளுமன்றத்தை கூட்டி வாக்கெடுப்பு நடத்தி ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாளைய தினம் ஜனாதிபதி பதவியிலிருந்து இராஜினாமா செய்யப் போவதாக பிரதமருக்கும் சபாநாயகருக்கும் தொலைபேசி மூலம் அறிவித்துள்ளார்.

அந்தவகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியை இராஜினாமா செய்தபின் புதிய ஜனாதிபதியொருவரை நியமிப்பது மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை

04



சுமார் 3 மாத காலத்திற்குப் பின்னர் நேற்று கொழும்பு, குணசிங்கபுர பகுதிவாழ் மக்களுக்கு குணசிங்கபுர விளையாட்டு மைதானத்தில் லிற்றோ சமையல் எரிவாயு விநியோகிக்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட படம். படம்: ஏ.எஸ்.எம்.ஜாவித்



# Gas சிலிண்டர்களை பெற மின் பட்டியல் அவசியம்

### மே மாத பட்டியலை காண்பிக்க அறிவுறுத்து

03

# சர்வ கட்சி அரசு குறித்த முடிவின் பின்னரே அமைச்சரவை பதவி விலகும்

### பிரதமரின் ஊடகப்பிரிவு நேற்று அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சர்வகட்சி அரசாங்கத்தினை உருவாக்குவதற்காக இணக்கப்பாடு எட்டப்பட்டவுடன் உடனடியாகவே அந்த அரசாங்கத்திடம் அனைத்துப் பொறுப்புக்களையும் ஒப்படைப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பிரதமரின் ஊடகப்பிரிவு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும்

04

# புதிய அரசாங்கத்தை அமைக்க நாங்கள் தயாராக உள்ளோம்

### SJB தலைவர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு



ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட மொட்டு அரசாங்கத்தின் மக்கள் ஆணை முடிந்துவிட்டதாகவும், தேசத்தை கட்டியெழுப்ப ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் தான் தயார் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளார்.

நாட்டை ஸ்திரப்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு பங்களிக்கவும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான அரசாங்கத்தை நியமிப்பதற்கு தாம் தயார் எனவும் அவர்

04

# இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்புவதா?

### ஊகச் செய்திகளுக்கு தூதரகம் மறுப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்திய இராணுவத்தினரை இலங்கைக்கு அனுப்பப் போவதாக சமூக வலைதளங்கள் மற்றும் சில ஊடகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பிரசாரங்களை முற்றாக நிராகரிப்பதாகவும் அதில் எந்தவித உண்மையும் கிடையாது என்றும் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

அத்தகைய பிரசாரத்தை முற்றாக நிராகரிப்பதாகவும் அது இந்திய அரசாங்கத்தின்

04

# இலங்கை மக்களின் துயரில் பங்கெடுக்கும் பாப்பரசர்



அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை காரணமாக பாரிய துன்பத்தை அனுபவிக்கும் இலங்கை மக்களின் துயரத்தில் தாமும் பங்குகொள்வதாக தெரிவித்துள்ள பரிசுத்த பாப்பரசர் முதலாவது பிரான்ஸிஸ், அப்பாவி மக்களின் குரலுக்கு செவிமடுக்குமாறு இலங்கையிலுள்ள தலைவர்கள் மற்றும் அதிகாரிகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி

04

## யாழ் – கிளிநொச்சி இடையே

# 'யாழ் ராணி' ரயில் சேவை நேற்று முதல் ஆரம்பம்

**யாழ்.விசேட நிருபர்**



யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் இடையே யாழ்ராணி என்ற விசேட ரயில் சேவை நேற்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

அரச பணியாளர்கள் மற்றும் அறிவியல்நகர் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பணியாளர்களுக்கு வசதியாக இச்சேவையை ரயில் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. இதன்படி 'யாழ்ராணி' ரயில்

04

## மறைந்த ஜப்பான் பிரதமருக்காக

# இன்று தேசிய துக்க தினமாக பிரகடனம்



### தேசிய கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிடுமாறு அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜூலை 12ஆம் திகதியான இன்றைய தினத்தை தேசிய துக்க தினமாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.

மறைந்த ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் இன்றைய தினத்தை தேசிய துக்க தினமாக பிரகடனப்படுத்தியுள்ளதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. அதற்கிணங்க இன்றைய தினத்தில் நாட்டின்

04

## ஊடகவியலாளர்களை தாக்கிய

# STFஇன் உயரதிகாரி பணியிலிருந்து நீக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**




பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் பிரத்தியேக இல்லம் அமைந்துள்ள பகுதியில் கடந்த 09ம் திகதி இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் செய்தி சேகரிப்பிற்காகச் சென்ற ஊடகவியலாளர்களை தாக்கியமை தொடர்பில் பொலிஸ் விசேட செயலணியைச் சேர்ந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொமேஷ் லியனகேவை உடனடியாக

04

# புதிய முகங்கள் கூடி சர்வகட்சி அரசை அமைப்பதால் எந்தப் பயனும் இல்லை

### புதிய கொள்கைகள், முன்மாதிரியான விடயங்களே முக்கியம்



**சுமந்திரன் பிரதமராக நியமிக்கப்பட்டால் எனக்கு சந்தோஷம்**

**யாழ். விசேட நிருபர்**

புதியவர்கள், புதிய முகங்கள் ஒன்றுகூடி சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கின்றனர் என்பதற்காக எந்த பயனும் கிடையாதென தமிழ் மக்கள் கூட்டணியின்

04

## திருகோணமலையிலிருந்து ஹப்புத்தளை செல்கையில்

# 33,000 லீற்றர் டீசலுடன் குடைசாய்ந்தது பவுஸர்!

**ஹப்புத்தளை பங்கெட்டிய பகுதியில் சம்பவம்**



**தாங்கியிலிருந்த டீசல் முற்றாக விரயம்**

**சாரதியின் தூக்க கலக்கமே காரணம் என தெரியவருகிறது**

திருக்கோணமலை ஐ.ஓ.சி. எரிபொருள் முனையத்தில் இருந்து ஹப்புத்தளைக்கு 33 ஆயிரம் லீற்றர் டீசலை ஏற்றிச்சென்ற

04

# தனுஷ்கோடி மணல் திட்டில் இறக்கிவிடப்பட்ட அகதிகள்



### இந்திய கடலோர காவற்படையினரால் மீட்பு

**மன்னார் குறூப், யாழ். விசேட நிருபர்கள்**

படகு மூலம் அகதிகளாக சென்று தனுஷ்கோடி மணல் திட்டில் பல மணி நேரம் உணவின்றி குழந்தைகளுடன் தஞ்சமடைந்த இலங்கை தமிழர்கள் 6 பேரை

04

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# சர்வதேச செய்திகள்

## ஆர்ஜன்டீன ஜனாதிபதி மாளிகைக்கு வெளியே பாரிய ஆர்ப்பாட்ட பேரணி



ஆர்ஜன்டீன ஜனாதிபதி மாளிகைக்கு வெளியே ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்றுகூடியதைத் தொடர்ந்து, நாட்டு மக்கள் ஒருமைப்பாட்டுடன் செயல்படும்படி ஜனாதிபதி அல்பெர்ட்டோ பெர்னாண்டஸ் கேட்டுக்கொண்டார்.

அதிகரித்துவரும் பணவீக்கமும், நாட்டின் கடனும் மக்களிடையே விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. ஏழ்மையைப் போக்க அரசாங்கம் இன்னும் கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என்று இடதுசாரிக் கட்சியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மிதவாதக் கட்சியைச் சேர்ந்த 2 பேர் கடந்த மாதம் ஆர்ஜன்டீன அமைச்சரவையிலிருந்து விலகினர்.

ஆர்ஜன்டீனாவின் பணவீக்கம் 60 வீதத்துக்கு மேல் பதிவாகியுள்ளது. அதனால் அதன் நாணய மதிப்பு பாதிக்கப்பட்டதோடு, எரிபொருள் இறக்குமதி விலைகளும் கூடியுள்ளது.

ஆர்ஜன்டீனாவின் சுதந்திர தினத்தை முன்னிட்டுப் பேசிய ஜனாதிபதி பெர்னாண்டஸ், சமூகத்தின் வெவ்வேறு பிரிவினர் ஒருமைப்பாட்டுடன் செயல்படுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். நிதியைச் சமநிலைப்படுத்தவும், நாணய மதிப்பை நிலைப்படுத்தவும் நாடு முற்பட வேண்டும் என்றார் அவர்.

ஆர்ஜன்டீனா கடந்த பல தசாப்தங்களில் பல தடவைகள் பொருளாதார நெருக்கடிகளை சந்தித்து வரும் நிலையில், இந்த ஆண்டு ஆரம்பத்தில் அந்த நாடு சர்வதேச நாணய நிதியத்துடன் 44 பில்லியன் டொலர் கடன் உடன்படிக்கை ஒன்றை செய்துகொண்டது. 2018 ஆம் ஆண்டு இவ்வாறான திட்டம் ஒன்று கைவிடப்பட்ட நிலையிலேயே மீண்டும் இந்த உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தலைநகர் புனோஸ் ஏயார்ஸில் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டவர்கள் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து விலகிக்கொள்ளுமாறு கோரும் பதாகைகளை ஏந்தி நின்றனர். அரசையும் விமர்சித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கடன் செலுத்துவதை மேற்கொள்ள வேண்டாம் என்றும் அழைப்பு விடுத்தனர்.

## வரும் நவம்பரில் 8 பில்லியனை தொடும் உலக மக்கள் தொகை



உலக மக்கள்தொகை இவ்வாண்டு நவம்பர் 15ஆம் திகதி எட்டு பில்லியனை தொடும் என்று ஐக்கிய நாடுகள் சபை மதிப்பிட்டுள்ளது.

அடுத்த ஆண்டில் உலகின் மிக அதிக மக்கள்தொகை கொண்ட நாடு என்ற இடத்தில் சீனாவை இரண்டாம் நிலைக்குத் தள்ளி இந்தியா முதலிடத்தைப் பிடிக்கும் என்று உலக நிறுவனத்தின் அறிக்கை கூறுகிறது.

உலக மக்கள் தொகையில் இது ஒரு புதிய மைல்கல் என்று தலைமைச் செயலாளர் அந்தோனியோ குட்டரெஸ் கூறினார்.

பூமியைக் காப்பதில் அனைவருக்கும் பொறுப்பு இருப்பதை நினைக்க வேண்டிய நேரம் இது. ஒருவருக்கு ஒருவர் உதவியாய் இருப்பதில் எங்கே தவறு நடக்கிறது என்பதையும் இப்போது எண்ணிப் பார்க்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

8 பில்லியனை நோக்கி விரைந்து நடைபோடும் மனித குலம் எண்ணிப் பார்த்துப் பெருமைப்பட வேண்டிய தருணங்களை அவர் சுட்டிக்காட்டினார். மருத்துவ முன்னேற்றம், நீண்ட ஆயுள், பிரசவத்தில் ஏற்படும் தாய்சேய் மரணங்கள் வெகுவாய்க் குறைந்திருப்பது ஆகியவற்றை அவர் குறிப்பிட்டார்.

ஒவ்வொருவரும் வெவ்வேறானவர் என்பதைக் கொண்டாட வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றார் உலக நிறுவனத் தலைமைச் செயலாளர்.

1950 தொடக்கம் உலக மக்கள் தொகை வளர்ச்சி அதன் மெதுவான வேகத்தை காண்பிப்பதாக ஐ.நா பொருளாதாரம் மற்றும் சமூக விவகாரங்கள் துறை தெரிவித்துள்ளது.

உலக மக்கள் தொகை 2030இல் 8.5 பில்லியனாகவும், 2050 இல் 9.7 பில்லியனாகவும் 2080களில் அதன் உச்சமாக 10.4 பில்லியனாகவும் இருக்கும் என்றும் அதன் பின்னர் 2100 வரை அந்த நிலை நிலைத்திருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஒரு மில்லியன் படையை திரட்ட உக்ரைன் திட்டம்



ரஷ்ய ஆக்கிரமிப்பில் இருந்து தெற்கு உக்ரைனை கைப்பற்றுவதற்கு நேட்டோ ஆயுதங்களைக் கொண்ட ஒரு மில்லியன் வலுவான படை ஒன்றை திரட்ட உக்ரைன் திட்டமிட்டிருப்பதாக அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கருங்கடலைச் சூழவுள்ள பகுதிகளை மீட்பது நாட்டின் பொருளாதாரத்திற்கு தீர்க்கமானது என்று பாதுகாப்பு அமைச்சர் ஒலெக்சி ரெஸ்னிகோவ் தெரிவித்துள்ளார்.

எனினும் இது ஒரு உறுதியான திட்டத்தை விட பிரசாரக் குரலாகவே உள்ளது என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கிழக்கு டொன்பாஸ் பிராந்தியத்தில் நிலங்களை கைப்பற்றுவதில் ரஷ்யா முன்னேற்றம் கண்டு வரும் நிலையிலேயே பாதுகாப்பு அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். தொடர்மாடி கட்டடத் தொகுதி ஒன்றின் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை ரஷ்யா நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 18 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு 20க்கும் அதிகமானவர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளனர்.

டொன்பாஸ் பிராந்தியத்தில் உள்ள கிரமடோஸ் நகருக்கு அருகில் உள்ள சாசிவ் யார் பகுதி மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

## நீர் பற்றாக்குறையால் பாக். மாம்பழ உற்பத்தி வீழ்ச்சி



மாம்பழத்துக்குப் பேர்போன நாடாக உள்ள பாகிஸ்தானில் மாம்பழ உற்பத்தி 40 வீதம் வரை குறைந்துள்ளது.

பருவநிலை மாற்றத்தால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய நாடுகளில் ஒன்றாகப் பாகிஸ்தான் அடையாளங்காணப்பட்டுள்ளது.

அதிக வெப்பம், நீர்வளத் தட்டுப்பாடுகள் போன்ற காரணத்தால் பாகிஸ்தானில் மாம்பழ உற்பத்தி பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

இவ்வாண்டு மார்ச் மாதத்தில் வெப்பநிலை அதிகரிப்பு எதிர்பார்த்ததைவிட முன்கூட்டியே ஏற்பட்டது. வெப்ப அலைகள் பயிர்களைச் சேதப்படுத்தி நீர்வளங்களை வற்றச் செய்தன. அதனால் மாம்பழ உற்பத்தி குறைந்ததாக விவசாயிகளில் பலர் தெரிவித்தனர்.

அவர்களில் சிலர், மாம்பழ அறுவடை வழக்கமான அளவை விட இவ்வாண்டு பாதியளவுதான் கிடைத்திருப்பதாகக் கூறுகின்றனர்.

பாகிஸ்தானில் இவ்வாண்டின் மொத்த மாம்பழ அறுவடை அளவிடப்படவில்லை. எனினும் மாம்பழ உற்பத்தி சுமார் 20இலிருந்து 40 வீதம் வரை குறைவாக இருப்பதாக அந்நாட்டின் அரசாங்க விவசாய பிரிவு தெரிவித்தது.

உலகில் மாம்பழ ஏற்றுமதியில் முன்னணியில் இருக்கும் நாடுகளில் ஒன்றாக பாகிஸ்தான் உள்ளது.

## ஜப்பான், அவுஸ்திரேலியாவின் இராணுவச் செலவு அதிகரிப்பு



ஜப்பான், அவுஸ்திரேலியா, தென் கொரியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் தத்தமது இராணுவத்திற்கான வரவு செலவுத்திட்டங்களையும் செலவீனங்களையும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

தென் சீனக் கடற்பிராந்தியத்தில் சீனாவின் இராணுவ நடவடிக்கைகள் அதிகரித்துள்ள நிலையில் இந்த நாடுகள் மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாகவும் சொலமன் தீவுகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின்னர் பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் இராணுவ நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகவும் சிங்கப்பூர் போஸ்ட் குறிப்பிட்டுள்ளது.

புவியரசியல் பதற்றங்கள் காரணமாக சீனாவுடனான ஜப்பானின் உறவுகளும் மோசமடைந்து வருகின்றன. ஜப்பானின் கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் வசிக்காத செங்காகு தீவுகளுக்கு சீனா உரிமை கோருவதற்கு ஜப்பானிய மக்கள் ஏற்கனவே தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். அப்படியிருந்தும் தாய்வான் நீரிணையில் கையாளும் தந்திரோபாயத்தை செங்காகு தீவுகள் கடற்பகுதியிலும் கப்பல்களை அனுப்பி சீனா கையாளுவதாக வொஷிங்டனை தளமாகக் கொண்டுள்ள உலகளாவிய அமைப்பொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலையில் தாய்வானுக்கு அருகிலுள்ள யோனகுனி தீவுகளில் தன் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஜப்பான் அதிகரித்துள்ளது.

போதிய சம்பளம் இல்லை

## அரச ஊழியர்களின் வேலைநிறுத்தத்தால் லெபனானில் அன்றாட வாழ்வு ஸ்தம்பிதம்



லெபானானில் அரச ஊழியர்களுக்கு போதுமான சம்பளம் கிடைக்காத நிலையில் அவர்கள் நடத்தி வரும் வேலைநிறுத்தப் போராட்டங்கள் நாட்டை மேலும் சீர்குலையச் செய்துள்ளது.

சுமார் 100 வீதமான அரச ஊழியர்களும் முழுமையான அல்லது பகுதி அளவு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருவதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பெய்ரூட் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

வரும் ஓகஸ்டில் இரவு நேரங்களில் வேலை செய்வதை நிறுத்துவதாக பெய்ரூட்டின் சர்வதேச விமான நிலைய விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் கடந்த வாரம் அறிவித்திருந்தனர்.

இந்த சூழல் நீதிமன்றங்கள் தொடக்கம் பாடசாலைகள் வரை பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது.

குற்றவியல் வழக்குகளில் வேலை நிறுத்தம் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கும் நிலையில் முன்கூட்டிய விடுதலைகள் அல்லது சிறைத் தண்டனையை குறைக்கும் நடைமுறைகளில் தாமதத்தை ஏற்படுத்தக் காரணமாகியுள்ளது.

“நீதிமன்ற முறைமை சரியாக செயற்பட்டிருந்தால் எனது கட்சிக்காரர்கள் தற்போது விடுதலை பெற்றிருக்கக் கூடும்” என்று வழக்கறிஞரான ரபீக் உரே கரைசி தெரிவித்துள்ளார்.

லெபனான் நாணயத்தின் வீழ்ச்சி இந்தப் பிரச்சினையின் மையமாக உள்ளது. சிறையில் இருந்து முன்கூட்டியே விடுதலை செய்யப்படுவதற்கு உளவியல் மருத்துவர் ஒருவர் அந்தக் கைதியை பரிசோதிக்க வேண்டும். அவ்வாறான மருத்துவருக்கு அரசு தற்போது 2 அமெரிக்க டொலருக்கு குறைவான கட்டணத்தையே வழங்குகிறது. இதனால் மருத்துவர்கள் அந்தப் பணிக்கு முன்வருவதில்லை.

லெபனானின் லிரா நாணயம் 2019 தொடக்கம் மோசமான சரிவை சந்தித்துள்ளது. இதனால் கடந்த வாரத்தின் நாணய மாற்று விகிதத்தின்படி மாதாந்த குறைந்த சம்பளம் 450 டொலரில் இருந்து 24 டொலர் வரை வீழ்ச்சி கண்டுள்ளது.

அரசு புதிய வரவு செலவுத் திட்டம் அல்லது சம்பள அதிகரிப்புக்கு ஒப்புதல் அளிக்கத் தவறியுள்ளது. அமைச்சுகளிலும் காகிதம் மற்றும் மை போன்ற அடிப்படை பொருட்கள் தீர்ந்து வருகின்றன.

லெபனான் சீர்திருத்த செயற்பாட்டுக் குழுவின் நிறுவன உறுப்பினரான கிரைசி, அமைப்பின் சீரழிவு மேலும் மேலும் தெளிவாகத் தெரிகிறது என்று குறிப்பிட்டார்.

“மூன்று வாரங்களுக்கு முன் நான் (பொலிஸ் நிலையம் ஒன்றில்) இருந்தேன். அங்கு கைது செய்யப்பட்ட சிலர் இடம் இல்லாமல் குளியலறையில் உறங்குகின்றனர்” என்று அவர் குறிப்பிட்டார்.

‘லெபனானின் நிலை பரிதாபமானது. ஆட்சி அமைப்பின் கடைசி தூண்களாக உள்ள நீதித் துறை மற்றும் பாதுகாப்பு அமைப்பு வீழ்ச்சி காணும்போது ஒட்டுமொத்த சமூகமும் வீழ்ச்சி கண்டுவிடும். இந்த சுரங்கத்தின் முடிவில் எந்த வெளிச்சத்தையும் காண முடியாது” என்றும் அவர் குறிப்பிட்டார்.

லெபனான் நாணய வீழ்ச்சியால் அந்நாடு முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடியை சந்தித்து வருவதோடு அங்குள்ள மக்களின் சம்பளத்தின் மதிப்பு 90 வீதத்திற்கு அதிகம் வீழ்ச்சி கண்டுள்ளது. லெபனானின் வறுமை 74 வீதத்திற்கு மேல் அதிகரித்திருப்பதாக உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

## கொவிட்: உலகின் மிகப்பெரிய சூதாட்ட மையத்திற்குப் பூட்டு



உலகின் மிகப்பெரிய சூதாட்ட மையமாக உள்ள மக்காவுவில் கொரோனா தொற்று காரணமாக அனைத்து சூதாட்ட விடுதிகளும் நேற்று மூடப்பட்டன.

30க்கும் அதிகமான சூதாட்ட விடுதிகள் உட்பட அத்தியாவசிமற்ற வர்த்தகங்களை ஒரு வாரத்திற்கு மூடுவதற்கு நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

சீனாவின் சிறப்பு நிர்வாகத்தில் உள்ள இந்த நகரில் கடந்த ஜூன் நடுப்பகுதி தொடக்கம் 1,526 கொவிட் தொற்றுச் சம்பவங்கள் பதிவாகி இருப்பதாக உத்தியோகபூர்வ தரவுகள் கூறுகின்றன.

இந்தக் கடுமையான விதிகள் காரணமாக சூதாட்டப் பங்குகள் நேற்று திங்கட்கிழமை வீழ்ச்சி கண்டன.

2020 ஆரம்பத்திற்குப் பின்னர் இந்த நகர் மிக மோசமான கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்த சுமார் 19,000 பேர் மீது கட்டாய தனிமைப்படுத்தல் அமுல்படுத்தப்பட்டுள்ளது. மதுபான விடுதிகள், திரையரங்குகள் உட்பட பாடசாலைகள் மற்றும் பொழுதுபோக்கு இடங்கள் மூடப்பட்டுள்ளன.

ஜப்பான் தேர்தல்

## சுட்டுக்கொல்லப்பட்ட அபேவின் ஆளும் கூட்டணிக் கட்சி வெற்றி



ஜப்பான் பாராளுமன்ற மேலவைத் தேர்தலில், சுட்டுக் கொல்லப்பட்ட முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் லிபரல் ஜனநாயக கட்சி பெரும்பான்மை இடங்களை கைப்பற்றி வெற்றி பெற்றுள்ளது.

தேர்தலுக்கு இரு நாட்களுக்கு முன் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் பாராளுமன்றத் தேர்தலில் அனுதாப அலையை வீசியது.

மொத்தமுள்ள 248 இடங்களில் ஷின்சோ அபேவின் லிபரல் ஜனநாயகக் கட்சி மற்றும் அதன் கூட்டணி பெரும்பான்மை இடங்களை கைப்பற்றியதாக கூறப்படுகிறது. பல்வேறு சட்ட திருத்தங்களை பிரதமர் கிஷிடோ தலைமையிலான அரசு மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாராளுமன்றத்தின் குறைந்த அதிகாரம் கொண்ட மேலவைக்கான தேர்தல் பதவியில் உள்ள அரசுக்கான மக்கள் ஆதரவை கணிக்கும் தேர்தலாகவே பார்க்கப்படுகிறது. கீழவைக்கான தேர்தலே ஆட்சி மாற்றத்தை தீர்மானிப்பதாக உள்ளது.

ஜப்பானின் நீண்டகால பிரதமராக இருந்த அபே தேர்தல் பிரசாரத்தின் போதே கடந்த வெள்ளிக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 1.4 மில். ஆண்டு பழைமையான எலும்பு ஸ்பெயினில் கண்டுபிடிப்பு



ஸ்பெயினில் 1.4 மில்லியன் ஆண்டுகள் பழைமையான மனித எலும்புகள் என்று நம்பப்படும் சிலவற்றைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

வடக்கு ஸ்பெயினின் பர்கோஸ் மாகாணத்தில் உள்ள அடாபுர்கா மலைகளில் பழமையான குகைகள் உள்ளன. இந்தக் குகைகளில் ஆராய்ச்சி மேற்கொள்ளும்போது பண்டைய மனித எலும்புகள் தோண்டியெடுக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேல் தாடை, கன்னத்தின் எலும்புகள், பழங்கால எச்சங்கள் ஆகியவை தங்கள் தேடுதல் வேட்டையில் கிடைத்ததாக ஆய்வாளர்கள் கூறினர். இந்த எலும்புகளில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சியின் மூலம் ஐரோப்பாவில் வாழ்ந்த ஆரம்பகால மனிதர்களின் முகத்தின் வடிவத்தைப் பார்க்க முடியும். மனித முகத்தின் பரிணாம வளர்ச்சிக்கான முக்கிய தடயங்களை இந்த ஆராய்ச்சியின் முடிவில் பெறமுடியும் என்று அடாபுர்கா அறக்கட்டளைக் குழு தெரிவித்துள்ளது.

எலும்புகளின் வயது, அது எந்த இனத்தைச் சேர்ந்தது போன்ற அடையாளங்களைத் தெரிந்துகொள்ள ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும் என்று அவர்கள் கூறினர். அதற்கு குறைந்தது ஓராண்டு ஆகும் என்றும் ஆராச்சியாளர்கள் தெரிவித்தனர்.

ஐரோப்பாவிற்கு வந்த முதல் மக்களின் சுவாரஸ்யமான புதைபடிவத்தைக் கண்டெடுத்துள்ளதாக ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளர் கூறினார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
2022 ஜூலை 12 செவ்வாய்க்கிழமை



**தொழுகை நேரம்**
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

**இன்றைய சுபதினம்**
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# எரிவாயு விநியோகம் நேற்று முதல் ஆரம்பம்

## இன்றும் கொழும்பு பகுதிகளில் விநியோகம்




எரிவாயு சிலிண்டர் விநியோகம் நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

கொழும்பில், 12 கிலோ கிராம் நிறையுடைய சிலிண்டரின் விலை 4,910 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுமென லிற்றோ நிறுவனம் அறிவித்துள்ளது. அத்துடன் அதிக விலைக்கு பிற தரப்பினரிடமிருந்து கொள்வனவு செய்வதை தவிர்க்குமாறு நுகர்வோரிடம் அந்த நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இன்றும், நாளையும் கொழும்பு உட்பட சன நெரிசல் அதிமாக உள்ள பகுதிகளில் லிற்றோ எரிவாயு விநியோகம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும். அத்துடன் 13 ஆம் திகதி முதல் ஏனைய பகுதிகளுக்கும் லிற்றோ எரிவாயு சிலிண்டர் விநியோகிக்கப்படும் எனவும் லிற்றோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிவாயு விநியோக நடவடிக்கையில் இராணுவம், பொலிஸார் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்பதுடன் எரிவாயு விநியோகத்தை சிறந்த முறையில் முன்னெடுக்க பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அந்நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

6 கோடி ரூபா பெறுமதியான

# ஐஸ் போதைப்பொருளுடன் நேற்று ஒருவர் கைது

(லோரன்ஸ் செல்வநாயகம்)



நான்கு கோடி ரூபா பெறுமதியான ஐஸ் ரக போதைப்பொருளை கடத்திய நபரொருவரை வத்தளை பகுதியில் நேற்று பொலிஸ் விசேட செயலணியினர் கைது செய்துள்ளனர்.


அவரிடமிருந்து நான்கு கிலோ ஐஸ் ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் 35 வயதுடையவரென்றும் அவர் மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் தெரிவித்த அவர், நான்கு கோடி ரூபா பெறுமதியான ஐஸ் ரக போதைப்பொருளை கார் ஒன்றில் சூட்சுமமாக மறைத்து வைத்து சந்தேக நபர் பயணித்திருந்த போது பொலிஸ் விசேட செயலணியினர் அவரைக் கைது செய்ததாகவும் தெரிவித்தார்.

பொலிஸ் விசேட செயலணியின் கட்டளை அதிகாரி பிரதிபொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தரவின் பணிப்பின் பேரில் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சி.ஆர்.பாரமுல்ல தலைமையிலான குழுவினரே மேற்படி காரை சுற்றிவளைத்து சந்தேக நபரை கைது செய்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# "இலங்கைக்கு இந்தியா எப்போதுமே ஆதரவு"

## அண்டை நாட்டுக்கான உதவி தொடரும்



இந்திய அரசு இலங்கைக்கு எப்போதும் ஆதரவாக இருப்பதாகவும், தற்போதைய பொருளாதார நெருக்கடியில் அண்டை நாடு என்ற முறையில் அதற்கு உதவ முயற்சிப்பதாகவும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மூன்று நாள் பயணமாக திருவனந்தபுரம் வந்த அவர், விமான நிலையத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, "நாங்கள் இலங்கைக்கு மிகவும் ஆதரவாக இருக்கிறோம். அந்நாட்டுக்கு நாங்கள் உதவ முயற்சிக்கிறோம், அவர்கள் சம்பந்தப்பட்ட இடங்களில் நாங்கள் எப்போதும் மிகவும் உதவியாக இருக்கிறோம்," என்று கூறினார்.

"இப்போது இலங்கையில் அவர்கள் சொந்த பிரச்னைகளை தீர்க்க முற்பட்டுள்ளார்கள். எனவே அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். தற்போதைக்கு இலங்கை அகதிகள் நெருக்கடி எதுவும் இந்தியாவுக்கு இல்லை,"

எனவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக, இதே விவகாரம் தொடர்பாக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் இலங்கைக்கு தேவையான எல்லா உதவிகளையும் இந்தியா வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

"இலங்கையில் உருவாகி வரும் அரசியல் சூழ்நிலையை காங்கிரஸ் கட்சி கவலையுடன் கவனித்து வருகிறது.

கடுமையான நெருக்கடி நிலவும் இந்த தருணத்தில் இலங்கை மற்றும் அதன் மக்களுக்கு காங்கிரஸ் கட்சி தனது ஆதரவை வெளிப்படுத்துகிறது. இந்த சூழலை இலங்கையர்களால் சமாளிக்க முடியும் என்று நம்புகிறேன்," என்றும் அவர் கூறியுள்ளார்.

# பாராளுமன்ற குழு கூட்டங்கள் தற்காலிகமாக நிறுத்திவைப்பு

## கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித்த ஹேரத் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



நாட்டின் தற்போதைய நிலையைக் கருத்திற்கொண்டு பாராளுமன்ற குழு கூட்டங்களை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெற்றோலிய கூட்டுத்தாபன மொத்த களஞ்சிய முனைய நிறுவனம் மற்றும் பொது பயன்பாட்டு ஆணைக்குழு ஆகியவற்றின் தலைவர்கள் இன்றைய தினம் கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். எனினும் நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலையை கருத்திற்கொண்டு அந்த கூட்டங்களை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அக்குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் கடந்த வாரத்தில் கோப் குழுவில் தெரிவித்த தனிப்பட்ட கருத்தை அடிப்படையாக வைத்து எரிபொருள் விலை தொடர்பில் நாட்டில் பல்வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த நிலையில் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தபானத்தின் தலைவர் ஆகியோரை அழைத்து விசாரணை நடத்த கோப் குழு தீர்மானித்திருந்தது. அந்த கூட்டம் இன்று நடைபெறவிருந்த நிலையில் அக்கூட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# படகு மூலம் அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 77 பேர் கைது

## களுவங்கேணி கடற்கரையில் கடற்படை அதிரடி



சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 77 பேர் மட்டக்களப்பு களுவங்கேணி கடற்கரையில் வைத்து நேற்று (11) கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு களுவங்கேணி கடற்கரையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு இயந்திர படகில் பயணித்த போதே இவர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர். அதில் பெண் ஒருவர் உட்பட 17 பேரை ஏறாவூர் பொலிஸாரிடம் விசாரணைக்காக ஒப்படைத்துள்ளதுடன், ஏனைய 60 பேர் படகுடன் திருகோணமலை கடற்படை முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படை புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கு அமைய நேற்று திங்கட்கிழமை அதிகாலை 02.00 மணியளவில் ஏறாவூர் கடற்பகுதியில் பயணித்த இயந்திரப்படகை கடற்படையின் படகுகள் சுற்றிவளைத்து முற்றுகையிட்டன. இதன்போது படகில் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முற்பட்ட 60 பேரை கடற்படையினர் கைது செய்தனர்.

அதேவேளை, அந்த சட்டவிரோத படகில் ஏறுவதற்காக களுவங்கேணி கடற்கரையில் வேன் ஒன்றில் காத்திருந்த மேலும் 17 பேரை கடற்படையின் புலனாய்வு பிரிவினர் பொலிஸாருடன் இணைந்து சுற்றிவளைத்து கைது செய்தனர். இந்நடவடிக்கையில் மொத்தமாக 77 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

அதில் கைது செய்யப்பட்ட 60 பேரையும் படகையும் திருகோணமலை கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்றுள்ளதுடன், களுவங்கேணி கடற்கரையில் கைது செய்யப்பட்ட பெண் ஒருவர் உட்பட 17 பேரும் ரொக்கப்பணம் 14 இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவும் வேன் ஒன்றும் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஜனாதிபதி மற்றும் அலரி மாளிகையில்

# பெறுமதியான சொத்துக்கள் கொள்ளை குறித்து விசாரணை

## அதிகாரிகளுக்கு DIG தென்னகோன் பணிப்புரை



ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றுக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்துமாறு மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் பணிப்புரை விடுத்துள்ளார்.

கொழும்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் சந்திர குமார மற்றும் மேல் மாகாண குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரோஹான் பிரேமரத்ன ஆகியோருக்கு அவர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

சூம் தொழிற்நுட்பம் ஊடாக நடைபெற்ற கூட்டத்தில் அவர் உத்தரவை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றுக்குள் சென்றவர்கள் அங்குள்ள சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியுள்ளதாகவும் பெறுமதியான பொருட்களை திருடிச்சென்றுள்ளதகவும் தேசபந்து தென்னகோன் இந்த கூட்டத்தில் கூறியுள்ளார்.

உடனடியாக இது சம்பந்தமாக விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் சாட்சியங்கள் அழிக்கப்படும் முன்னர் சாட்சியங்களை சேகரிக்க வேண்டும் எனவும் பாதுகாப்பு கெமராக்களில் பதிவாகியுள்ள காட்சிகளை உடனடியாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தென்னகோன் கூறியுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை மற்று ஜனாதிபதி செயலகத்திற்குள் சென்றவர்கள், அவற்றுக்குள் எடுத்த காணொளிகள், புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டு வருகின்றனர்.

# முஸ்லிம் மீடியா போரத்தின் இணைப்பாளர்கள் தெரிவு

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் நடப்பு ஆண்டுக்கான மாவட்ட இணைப்பாளர்களாக செயற்குழுவால் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரங்கள் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோர் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், அம்பாறை : ஏ. எல். எம். சலீம், எம் எப் எம் நவாஸ், கொழும்பு: அஸ்ரப் ஏ சமத், களுத்துறை: ஏ. எல். எம் அஸ்வர், கம்பஹா: எஸ். ஏ. எம். பவாஸ், குருணாகல்: யூ. எல். முஸம்மில், புத்தளம்: எம். எம். சியாஜ், ரம்சின் றசீன், பொலன்னறுவை: எம். ஏ. ரஸீத், அனுராதபுரம்: மௌலவி எம். எம். ரம்லான், மொனராகலை: மௌலவி எம். டப்ளியு. சல்சபீல், கண்டி: எம். ஏ. எம். சியாம், பதுளை: எம். கே. எம். நியார், மட்டக்களப்பு: பளீலுல் ரஹ்மான், இரத்தினபுரி: எம். எஸ். எம் நசீர், கேகாலை: ஆதில் அலி சப்ரி, வட பிராந்தியம்: ஏ. எஸ். எம் ஜாவித், ஏ. ஏ. ஏம். மிஸ்பாஹ், காலி: ஏ. சி. எம். ஸபீக், மாத்தறை: எம். மிப்ராஹ், ஹம்பாந்தோட்டை: இர்பான் ஸகரியா, நுவரெலியா: எஸ்.எம்.எம். ரமலி, மாத்தளை: எம் நஜிமுதீன், திருகோணமலை: ஏ. எஸ் யாசின் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக வெளியிட்டுள்ள

06

ஜூலை 09ல் ஆர்ப்பாட்டக்காரர்களுடன்

# மஹரகமவில் இணைந்த பொலிஸ் அதிகாரி காலிமுகத்திடலில் கைது!

## நேற்று அதிகாலை கோட்டை பொலிஸார் நடவடிக்கை



மஹரகமவில் கடந்த சனிக்கிழமை (09) இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் இணைந்து கொண்டார் என அடையாளம் காணப்பட்ட பொலிஸ் அதிகாரி நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று (11) அதிகாலை காலிமுகதிடல் போராட்டப் பகுதியில் நின்று கொண்டிருந்தபோது கோட்டை பொலிஸ் அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த அதிகாரி பொலிஸ் போக்குவரத்து பிரிவில் கான்ஸ்டபிள் ஆவார். இவர் உத்தியோகபூர்வ உடைகள் மற்றும் காலணிகளை அணிந்து கொண்டு சந்தேகத்துக்கிடமான முறையில் அங்கு காணப்பட்ட நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டதாக கோட்டை பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பின்னர் அவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

# Gas சிலிண்டர்களை பெற மின் பட்டியல் அவசியம்

## மே மாத பட்டியலை காண்பிக்க அறிவுறுத்து



நாட்டை வந்தடைந்த 3700 மெட்ரிக் தொன் சமையல் எரிவாயுவை சந்தைக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பமாகியுள்ள நிலையில் அதனை கொள்வனவு செய்யும் போது, கடந்த மே மாத மின்சார பட்டியலை வைத்திருத்தல் அவசியமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் அதிகளவான எரிவாயு கொள்கலனை பதுக்கி வைக்கும் செயற்பாட்டை தவிர்க்க முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, 12.5 கிலோகிராம் நிறையுடைய லிற்றோ சமையல் எரிவாயுவின் விலை 50 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக லிற்றோ நிறுவனம் அறிவித்துள்ளது. இதன்படி, 12.5 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயு கொள்கலன் 4, 910 ரூபா என்ற புதிய விலையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

எவ்வாறாயினும், 5 கிலோகிராம் மற்றும் 2.5 கிலோகிராம் எரிவாயு கொள்கலன்களின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை என்பதுடன் பழைய

06

# கனடா உதயன் ஆசிரியருக்கு இன்று பாராட்டு விழா



கனடா உதயன் ஆசிரியர் நா. லோகேந்திரலிங்கத்தின் 50 ஆண்டு ஊடக இலக்கியப் பணிகளை பாராட்டும் நிகழ்வு இன்று (12) செவ்வாய்க்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராட்டு விழாவுடன் கனடா உதயன் இலங்கைச் சிறப்பிதழ் பற்றிய ஒரு பார்வையும் இன்று மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழு சார்பில் உடுவை எஸ். தில்லைநடராசா ஆர்வமுள்ளவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 242.20 | 253.61 |
| கனடியன் டொலர் | 273.91 | 286.11 |
| யூரோ | 361.16 | 375.55 |
| ஜப்பான் யென் | 2.5979 | 2.7032 |
| சிங்கப்பூர் டொலர் | 253.89 | 264.32 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 426.45 | 443.43 |
| சுவிஸ் பிராங்க் | 363.40 | 379.55 |
| அமெரிக்க டொலர் | 357.79 | 368.39 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 958.44 | கட்டார் ரியால் | 98.53 |
| குவைத் டினார் | 1,174 | சவூதி ரியால் | 96.25 |
| ஓமான் ரியால் | 938.55 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.37 |

# அ.தி.மு.க.வில் இருந்து ஓ.பன்னீர்செல்வம் நீக்கம்; பொதுக்குழுவில் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றம்

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

## இடைக்கால பொதுச் செயலாளராக எடப்பாடி தெரிவு


அ.தி.மு.கவில் இருந்து ஓ.பன்னீர்செல்வத்தை நீக்க பொதுக்குழுவில் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.அதிமுக பொதுக்குழு கூட்டம் சென்னை வானகரத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் திங்கட்கிழமை நடைபெற்றது. இதில் தலைவர்கள் பேசிக்கொண்டு இருக்கும்போது பொதுக் குழு உறுப்பினர்கள் ஓ.பன்னீர் செல்வத்தை கட்சியில் இருந்த நீக்க வேண்டும் என்று கோஷங்களை எழுப்பினர்.

நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து அதிமுக செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு வானகரத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. பொதுக் குழுவிற்கு அவைத் தலைவர் தமிழ் மகன் உசேன் தலைமை தாங்கி பொதுக் குழு கூட்டத்தை நடத்தி தர வேண்டும் என்ற தீர்மானத்தை எடப்பாடி பழனிசாமி முன்மொழிந்தார். இதை கே.பிமுனுசாமி வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 16 தீர்மானங்கள் நத்தம் விஸ்வநாதன் முன் மொழிந்தார். இந்தத் தீர்மானங்களை முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் வழி மொழிந்தார். இதனைத் தொடர்ந்து அதிமுக இடைக்கால பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்வு செய்யப்பட்டார்.

அதிமுக சட்ட விதி 20அ பிரிவு 7ம் தேதி பொதுக் குழு உறுப்பினர்களால் இடைக்கால பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்வு செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து பொதுச் செயலாளர் தேர்தல் 4 மாதங்களில் நடத்த வேண்டும் என்றும் தேர்தல் அதிகாரிகளாக நத்தம் விஸ்வநாதன் மற்றும் பொள்ளாச்சி ஜெயராமன் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அதிமுக பொருளாளர் மற்றும் அடிப்படை உறுப்பினர் உட்பட அனைத்து உறுப்பினர் பொறுப்புகளில் இருந்து ஓ.பன்னீர்செல்வத்தை நீக்க வேண்டும் என்ற தீர்மானத்தை முன்னாள் அமைச்சர் நந்தம் விஸ்வநாதன் கொண்டு வந்தார். இந்த தீர்மானத்தை பொள்ளாச்சி ஜெயராமன் முன்மொழிந்தார். மேலும் ஓ.பன்னீர் செல்வம் ஆதரவாளர்கள் வைத்திய லிங்கம்,ஜெ.சி.டி பிராபகர், பி.எச்.மனோஜ் பாண்டியன் ஆகிய 3 பேரையும் நீக்கக் கோரி தீர்மானம் கொண்டு வரப்பட்டது.




அவுஸ்திரேலிய, இலங்கை சொலிடாரிட்டி அமைப்பினரால் கடந்த சனிக்கிழமை (09) ஸ்ரேட் நூலக முன்றலில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இலங்கையில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவாகும் அரசுக்கு எதிராகவும் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்பாட்டத்தில் ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் கலந்துகொண்டனர்.

## புதிய ஜனாதிபதி தெரிவுக்கு...

நடத்துவதற்காக நேற்றைய கட்சித் தலைவர்கள் கூட்டம் நடத்தப்பட்டது.

மிக விரைவாக இடைக்கால அரசாங்கமொன்றை உருவாக்குவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக இதன்போது பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பிரதமரின் தலைமையில் அமைச்சரவை கூடியதாகவும் இடைக்கால அரசாங்கமொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு உடனடியாக பிரதமர் மற்றும் அமைச்சரவை இராஜினாமா செய்யவேண்டுமென அங்கு தீர்மானிக்கப்பட்டதாகவும் கட்சித் தலைவர்களுக்கு பிரதமர் அறிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்கள் கருத்துத் தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்றும் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டுமென்றும் குறிப்பிட்டதுடன் அனைத்துக் கட்சித் தலைவர்களும் அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் முக்கியஸ்தர்கள் 25 பேரை தெரிவுசெய்து குழுவொன்று நியமிக்கப்பட்டு அவர்களின் பெயர்கள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் இன்றைய தினம் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.அதற்கிணங்க இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் பாராளுமன்ற கட்டடத்தில் அந்தப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

## இருவேறு வீதி விபத்துக்களில்...

வாகன விபத்தில் இருவர் மரணமடைந்துள்ளதுடன் மேலுமொருவர் காயங்களுக்குள்ளாகியதாக படல்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வானொன்றும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் 37 மற்றும் 38 வயதுடைய இரு நபர்கள் மரணமடைந்துள்ளனர்.

கெஹெல்எல்லே பிரதேசத்தைச் சேர்ந்த பி.ஏ. அசித்த ரங்கண என்ற 37 வயது நபரும் தம்மிட பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 38 வயதுடைய சிந்தக புஷ்பகுமார ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் மோட்டார் சைக்கிளில் மூவர் பயணித்துள்ளதுடன் அவர்களில் இருவரே மரணமடைந்துள்ளதாகவும் மற்றவர் காயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை கம்பளை பெரட்டாசியிலிருந்து புஸ்ஸல்லாவை நோக்கி பயணித்த தனியார் பஸ் வண்டியொன்று காச்சமலை பகுதியில் விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த இருவர் மரணமடைந்துள்ளனர்.

பெரட்டாசி ரம்பொட பிரதேசத்தைச் சேர்ந்த சுரஞ்ஜித் புஷ்பகுமார் என்ற 39 வயது நபரும் ஹெல்பொட கட்டுகித்துல பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் கவிஷ்கர் என்ற 20 வயது இளைஞரும் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக புப்புரஸ்ஸ பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் வண்டியின் மிதிபலகையில் நின்றுகொண்டு மக்கள் பயணித்துகொண்டிருந்த போது பஸ் வண்டி வீதியை விட்டு விலகி மண்மேடு மீது சாய்ந்ததில் இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாரதியின் கவனயீனமான செயற்பாட்டால் இருவர் மரணமானதாக தெரிவித்த ஆத்திரமடைந்த பிரதேசவாசிகள் பஸ் வண்டியை தீயிட்டு கொளுத்தியுள்ளனர்.

அந்த பஸ் வண்டியில் சுமார் 80 பேர் பயணம் செய்துள்ளதாகவும் பெருமளவிலான பயணிகள் எந்தவித காயங்களுமின்றி காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இந்திய இராணுவத்தை இலங்கைக்கு...

நிலைப்பாடு அல்ல என்பதையும் இந்திய உயர் ஸ்தானிகராலயம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையானது ஜனநாயக ரீதியில் தமது அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக செயற்படும் இலங்கை மக்களுடன் இந்தியா இருப்பதாகவும் அது தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சு தெளிவான அறிவிப்பை ஏற்கனவே வெளியிட்டிருந்ததையும் இந்திய உயர் ஸ்தானிகராலயம் குறிப்பிட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி கோட்டாய ஆகியோர் வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில் அவர்களுக்கு ஆதரவாக இந்திய இராணுவத்தை அனுப்பத் தயார் என பா.ஜ.க. வின் மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் கருத்தொன்றை பகிர்ந்திருந்தார்.

அதில், “கோட்டாபய மற்றும் மஹிந்த ராஜபக்ஷ இருவரும் சுதந்திரமான தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையுடன் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இத்தகைய சட்டபூர்வமான தேர்தலை ஒரு கும்பல் கவிழ்க்க இந்தியா எப்படி அனுமதிக்கும் ?

அப்படியானால் நமது அயலவனாக உள்ள எந்த ஒரு ஜனநாயக நாடும் பாதுகாப்பாக இருக்காது. இந்தியாவின் இராணுவ உதவியை ராஜபக்ஷவினர் கோரும் போது நாங்கள் வழங்கத் தயார் ” என்று சுப்பிரமணியன் சுவாமி அவரது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு இந்திய பா.ஜ.க. வின் மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட கருத்தே ஊடகங்களிலும் சமூக ஊடகங்களிலும் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புதிய முகங்கள் கூடி சர்வகட்சி அரசை...

தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் திங்கட்கிழமை ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தற்போதுள்ள சூழலில் ஜனாதிபதி பதவி விலகினால் பிரதமரும், பிரதமர் செயலிழந்து போனால் அவருக்கு ஒரு மாத காலத்திற்கு சபாநாயகர் பதவியை ஏற்று நடத்த உரித்திருக்கின்றது. ஆகவே ஜனாதிபதிக்கு பதிலாக பிரதமரும் பிரதமருக்கு பதிலாக சபாநாயகருமென அந்த மூன்று பேருக்குமே அந்த உரித்து காணப்படுகின்றது.

புதியவர்கள் புதிய முகங்கள் என்பதற்காக நாங்கள் சர்வகட்சி அரசாங்கம் அமைக்க போகின்றோம் என மக்கள் முன் வந்தால் அதனால் எந்த பயனும் கிடையாது. எதிர்க்கட்சிகள் இணைந்து அரசாங்கம் அமைப்பது என்பதை விட எங்களிடம் என்ன கொள்கைகள் என்ன மாதிரியான விடயங்களை முன்வைத்து நாம் அரசாங்கத்தை அமைக்க போகின்றோம் என்பதே முக்கியம் என்றார்

பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் பிரதமராக நியமிக்கப்படலாம் என சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள கருத்துக்கள் தொடர்பாக கேட்ட போது,

"மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் உத்தியோகபூர்வமல்லாத வகையில் சுமந்திரனை பிரதமராக நியமிக்கலாம் என்று அணுகியநிலையில் அதை எல்லா கட்சிகளும் இணைந்து அழைத்தால் தான் அந்த பதவியை ஏற்க முடியும் என சுமந்திரனுக்கு தெரிந்த ஒருவர் என்னிடம் தெரிவித்தார். " சுமந்திரனை பிரதமராக அழைத்தமை உண்மையானால் நான் சந்தோஷம் அடைவேன். ஏனென்றால் அவர் என்னுடைய மாணவர். பல வருட காலமாக தெரிந்தவர் என்ற வகையில் அதற்கு நான் எதிர்ப்பு அல்ல. இது பற்றி இணைய வழிக் கலந்துரையாடலில் கூறியதன் காரணமாக இன்று அது பரகசியமாகியுள்ளது.

ஆனால் சில விடயங்களை மனதில் வைத்திருக்க வேண்டும். அவர் தன்னுடைய கட்சியினுடைய ஏகோபித்த விருப்பிலா அல்லது தன்னுடைய தனிப்பட்ட விருப்பில் ஏற்றுக் கொள்வதா என்பது ஒரு கேள்வி.

இரண்டாவது கேள்வி தமிழர்கள் அமைச்சுப் பதவியை ஏற்றதன் பிற்பாடு தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருந்தால், தாங்கள் என்ன காரணத்துக்காக பாராளுமன்றுக்கு கொண்டுவரப்பட்டார்கள் என்பதை மறக்க வேண்டிய நிலை ஏற்படும்.

காரணம் எந்நேரமும் மத்திய அரசுடன் இணைந்து வேலையைச் செய்யும்போது மத்திய அரசாங்கத்தினுடைய விருப்பு தாக்கம் செலுத்துவதால் தமிழ் மக்களுக்காக தேர்ந்தெடுக்கப்படுவர் என்பதை மறந்து விடக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

நான் நினைக்கின்றேன் எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஏற்றதன் பின்னர் அமிர்தலிங்கம் அவர்களின் வாழ்வில் பல முரண்பாடுகள் ஏற்பட்டன. அது போலவே சம்பந்தனும். சுமந்திரன் இவ்வாறு பதவி ஏற்றுக்கொள்வதானால் தமிழ் கட்சிகள் அனைவரினதும் ஏகோபித்த விருப்பை பெற்றுக்கொண்டால் நல்லது என நினைக்கின்றேன் என்றார்.

## தனுஷ்கோடி மணல் திட்டில்...

ஹேவர் கிராப்ட் ரோந்து கப்பல் உதவியுடன் பத்திரமாக மீட்ட இந்திய கரையோர காவற்படையினர், அவர்களை அரிச்சல்முனை கடற்கரைக்கு அழைத்து வந்து விசாரணைக்கு பின் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைத்தனர்.

நேற்று முன்தினம் (10) இரவு வவுனியா , பறையாளங்குளம் பகுதியை சேர்ந்த பாலசுகந்தன், அனுஜா,லிங்கேஸ்வரன் மற்றும் இரண்டு சிறுவர்கள் உட்பட 6 பேர் ஒரு படகில் புறப்பட்டு நேற்று (11) அதிகாலை சுமார் 5 மணி அளவில் தனுஷ்கோடி ஒன்றாம் மணல் திட்டில் இறக்கிவிடப்பட்டுள்ளனர்.

இதையடுத்து ராமேஸ்வரம் மரைன் பொலிசார் மண்டபம் கடலோர காவல் படைக்கு தகவல் கொடுத்து ஹேவர் கிராப்ட் ரோந்து கப்பல் உதவியுடன், குழந்தைகள் சகிதம் பல மணி நேரம் மணல் திட்டில் உணவின்றி தவித்த இலங்கை தமிழர்கள் ஆறு பேரையும் பத்திரமாக மீட்டு வந்தனர். பின்னர் மண்டபம் மரைன் காவல் நிலையம் அழைத்து சென்று விசாரணை நடத்திய பின்னர் மண்டபம் அகதிகள் முகாம் அதிகாரிகளிடம் அவர்களை ஒப்படைத்தனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வு,மறுபக்கம் அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் அரசு மருத்துவமனைகளில் மருந்து தட்டுப்பாடு உள்ளது.எனவே பட்டினி சாவில் இருந்து உயிரை காப்பற்றி கொள்ள இலங்கை ரூபாய் 4 இலட்சம் ரூபாய் கொடுத்து படகில் தமிழகத்திற்கு அகதிகளாக வந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் தங்களை அழைத்து வந்த படகு தனுஸ்கோடி முதல் திட்டில் இறக்கிவிட்டு சென்றதாகவும், பல மணி நேரம் உணவின்றி கடும் சூறைக்காற்றுக்கு மத்தியில் உயிரை பாதுகாத்து கொண்டு இருந்ததாகவும் தாங்கள் அணிந்திருந்த உடைகளை அசைத்து அந்த கடற்பிரதேசத்தில் மீன் பிடித்து கொண்டிருந்த மீனவர்களிடம் காப்பாற்றுமாறு உதவி கோரியதாகவும் தெரிவித்த அவர்கள் இந்திய கடலோர காவல் படைக்கு சொந்தமான கப்பலில் எங்களை போலீசார் பத்திரமாக உரிய நேரத்தில் மீட்டனர் எனவும் தெரிவித்தனர்.

கால தாமதமாகி இருந்தால் நிச்சயம் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும் என பாதுகாப்பு வட்டார அதிகாரிகள் நடத்திய விசாரணையில் அகதியாக வந்த இலங்கை தமிழர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் மாதம் 22ந் திகதி முதல் நேற்று வரை இலங்கையில் இருந்து 109 இலங்கை தமிழர்கள் அகதிகளாக தமிழகம் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இராணுவத்தினர் சுடவில்லை

ஜனாதிபதி மாளிகைக்குள் பிரவேசித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இராணுவத்தினர் சிலர் தன்னிச்சையாக, அவர்களை பாதிக்கச் செய்யும் நோக்கில் துப்பாக்கி வேட்டு நடத்தியதாக கூறப்படும் கூற்றுக்களை முற்றாக நிராகரிப்பதாகவும் அதில் எந்தவித உண்மையும் கிடையாது என்றும் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்திய ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது...

புகைப்படங்கள் சமூக வலைத்தளங்கள் மூலம் பிரசாரப்படுத்தப்பட்டு இராணுவத்தினர் மீது குற்றங்கள் சுமத்தப்பட்டு வருவது தொடர்பில் இராணுவம் கவனம் செலுத்திவருவதாகவும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

## முஸ்லிம் மீடியா போரத்தின்... 03ஆம் பக்கத் தொடர்

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த 25 மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட இணைப்பாளர்கள் அனைவரும் அடுத்த செயற்குழு தெரிவாகும் வரை செயற்படுவார்கள்.

## Gas சிலிண்டர்களை பெற... 03ஆம் பக்கத் தொடர்

விலையிலேயே விற்பனை செய்யப்படவுள்ளதாக லிற்றோ நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

லிற்றோ நிறுவனத்தின் உத்தியோகப்பூர்வ இணையத்தள முகவரிக்கு பிரவேசிப்பதன் ஊடாக எரிவாயு விநியோகிக்கப்படும் நிலையங்களை அறிந்துக்கொள்ள முடியும் என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

## புதிய அரசாங்கத்தை அமைக்க...

மேலும் தெரிவித்தார்.

இச்செயற்பாட்டிற்கு எதிராக யாராவது நாடாளுமன்றத்தில் சதிகளை மேற்கொண்டால் அது தேசத்துரோக செயல் எனவும்,நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் தனக்கு ஒத்துழைக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக் கொண்டார்.

## இன்று தேசிய துக்க தினமாக...

அனைத்து அரசாங்க நிறுவனங்களிலும் தேசிய கொடியை அரைக் கம்பத்தில் பறக்க விடுமாறு அந்த அமைச்சு அனைத்து அரச நிறுவனங்களுக்கும் உத்தியோகபூர்வ அறிவிப்பை விடுத்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள வேண்டுகோளுக்கிணங்க பொது நிர்வாக உள நாட்டலுவல்கள் அமைச்சு அந்த அறிவிப்பை விடுத்துள்ளது. எவ்வாறாயினும் அன்றைய தினம் அரசாங்க விடுமுறை தினம் அல்ல என்பதையும் அமைச்சு தெரிவித்துள்ளது .

## 33,000 லீற்றர் டீசலுடன்...

எரிபொருள் தாங்கியொன்று நேற்று குடைசாய்ந்து விபத்திற்குள்ளாகியது.

ஹப்புத்தளை பங்கெட்டிய முஸ்லிம் மகாவித்தியாலயத்திற்கு அருகாமையிலேயே அந்த பவுஸர் வீதியை விட்டு விலகி தடம்புரண்டது. சாரதியில் தூக்க கலக்கமே விபத்திற்கான காரணம் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இவ்விபத்து குறித்து அப்புத்தளை பொலிஸார் பூரண விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விபத்தில் எரிபொருள் தாங்கியில் இருந்த டீசல் முற்றாக வீண்விரயமானதுடன் எவ்வித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

## சர்வ கட்சி அரசு குறித்த முடிவின்...

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மத்தியிலான சந்திப்பொன்று நேற்றைய தினம் பிரதமரின் அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலை தொடர்பில் அங்கு விரிவாக ஆராயப்பட்டுள்ளதுடன் அந்த சந்திப்பில் கலந்துகொண்ட அனைத்து அமைச்சர்களும் சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டதும் அந்த அரசாங்கத்திற்கு பொறுப்புக்களை கையளிப்பதற்கு தீர்மானித்துள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பதவி விலகுவதை பிரதமரிடம்...

மக்கள் ஆர்ப்பாட்டத்தையடுத்து ஜனாதிபதி மாளிகையில் இருந்து ஜனாதிபதி வெளியேறியிருந்தார்.

இதனையடுத்து 13 ஆம் திகதி புதன்கிழமை தான் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகுவதாக ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவுக்கு தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, தான் முன்னர் அறிவித்தபடி பதவிவிலகுவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தற்போது உறுதிப்படுத்தியுள்ளார்.

## STFஇன் உயரதிகாரி...

நடைமுறைக்கு வரும் வகையில் பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் நடவடிக்கையை தடுக்காமை சம்பந்தமாகவே தாபனக்கோவை மூலம் பொலிஸ் மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் கீழ் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அவர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொமேஷ் லியனகே பொலிஸ் விசேட செயலணியின் பிரதமர் பாதுகாப்புப் பிரிவு பணிப்பாளராக பணிபுரிந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை மக்களின் துயரில்...

காரணமாக பாதிப்புக்குள்ளாகியுள்ள இலங்கை மக்களுக்காக உணர்வுபூர்வமான பிரார்த்தனைகளில் ஈடுபடுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள அனைத்து கத்தோலிக்க ஆயர்களுடன் இணைந்து இலங்கையில் அமைதி நிலையை நிலைநாட்டுவதற்கு நடவடிக்கையெடுக்குமாறு சம்பந்தப்பட்ட அனைவரையும் கேட்டுக் கொள்வதாகவும் பரிசுத்த பாப்பரசர் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் வத்திக்கான் புனித பீற்றர்ஸ் சதுக்கத்திலுள்ள பெசிலிக்கா பேராலயத்தில் நண்பகல் திருப்பலியின் போது அவர் அனைவருக்கும் இந்தெ அழைப்பை விடுத்ததுடன் இலங்கைக்காக விசேட பிரார்த்தனைகளையும் மேற்கொண்டுள்ளார்.

## மூன்று எரிபொருள் கப்பல்கள்...

என்றும் அத்துடன் மசகு எண்ணெய் கப்பலொன்று இம்மாதம் 14 ,16 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நாட்டை வந்தடையுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலுமொரு சுத்திகரிக்கப்படாத எரிபொருளைத் தாங்கிய கப்பலொன்று எதிர்வரும் 15, 17 ஆம் திகதிக்கிடைப்பட்ட காலத்தில் நாட்டை வந்தடையுமென்றும் அந்தக் கப்பல் நாட்டை வந்தடைந்ததும் அதற்கான நிதியை செலுத்தவேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இம் மாதம் 17,19 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் நாட்டுக்கு வரவுள்ள பெற்றோல் கப்பலுக்கான மீதமான தொகையை இன்று செலுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## 'யாழ் ராணி' ரயில் சேவை...

சேவை, காங்கேசன்துறையிலிருந்து காலை 06.00 மணிக்கு புறப்பட்டு காலை 8.11 மணிக்கு முறிகண்டியை அடையும்.

அங்கிருந்து மீண்டும், காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் புகையிரதம் காலை 11.20 மணிக்கு யாழ்ப்பாணத்தை சென்றடையும்.

மீண்டும் பிற்பகல் 02.00 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் புகையிரதம் மாலை 4.10 மணிக்கு முறிகண்டியை வந்தடையும்.

முறிகண்டியிலிருந்து மீண்டும் 4.40 மணிக்கு புறப்படும் இந்தப் புகையிரதம் இரவு 7.20 மணிக்கு காங்கேசன்துறையை சென்றடையும்.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு ஒரு வழிக் கட்டணமாக 90 ரூபாய் கட்டணமும் யாழ்ப்பாணத்திலிருந்து பளைக்கு 60 ரூபாயும் யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமத்துக்கு 35 ரூபாயும் கட்டணம் அறவிடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# நாம் நம்மை அன்பு செய்வது போல அயலாரையும் அன்பு செய்ய வேண்டும்

## அருட்தந்தை பிரான்ஸிஸ் அடிகளாரின் மறையுரையிலிருந்து



நிலை வாழ்வை பெற்றுக்கொள்ள நான் என்ன செய்ய வேண்டும் என்று திருச்சட்ட அறிஞர் ஒருவர் இயேசுவிடம் கேட்டார். அதற்கு இயேசு திருச்சட்ட நூலில் என்ன எழுதி இருக்கின்றது? அதில் நீர் என்ன வாசித்தீர் என கேட்டார்.

அதற்கு அவர் மறுமொழியாக உனது முழு இதயத்தோடும் முழு ஆற்றலோடும் முழு மனத்தோடும் உன் கடவுளாகிய ஆண்டவரை அன்பு கூருவாயாக.உன்னை நீ அன்பு கூருவது போல உனக்கு அடுத்திருப்பவரையும் அன்பு கூருவாயாக என்று எழுதியுள்ளது என்றார்.

அதன் போது இயேசு அதையே நீர் செய்யும் அப்பொழுது வாழ்வீர் என்றார்.

அதன் பின் அவர் எனக்கு அடுத்திருப்பவர் யார்? என கேள்வி கேட்டார் அதற்கு இயேசு ஒரு உவமையின் மூலம் பதிலளிக்கின்றார்.

"ஒருவன் எருசலேமிலிருந்து கீழ்நோக்கி எரிகோவுக்குப் போய்க்கொண்டிருந்தான். அப்போது, கொள்ளைக்காரர்களின் கையில் மாட்டிக்கொண்டான். அவர்கள் அவனிடமிருந்த எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டு, அவனை அடித்து, கிட்டத்தட்ட சாகும் நிலையில் விட்டுவிட்டுப் போனார்கள். ஆலய குரு ஒருவர் தற்செயலாக அந்த வழியில் வந்துகொண்டிருந்தார்; ஆனால் அவனைப் பார்த்தபோது அவர் எதிர்ப்பக்கமாகப் போய்விட்டார். அதேபோல், ஒரு லேவியரும் அந்த வழியில் வந்து அவனைப் பார்த்தபோது எதிர்ப்பக்கமாகப் போய்விட்டார். ஆனால், அந்த வழியில் பயணம் செய்துகொண்டிருந்த சமாரியர் ஒருவர் அவனைப் பார்த்தபோது மனம் உருகினார்"

"அவன் பக்கத்தில் போய், அவனுடைய காயங்கள்மேல் எண்ணெயையும் திராட்சமதுவையும் ஊற்றி, அவற்றுக்குக் கட்டுப் போட்டார். பின்பு, அவனைத் தன்னுடைய கழுதையின் மேல் ஏற்றி, ஒரு சத்திரத்துக்குக் கொண்டுபோய்க் கவனித்துக்கொண்டார். அடுத்த நாள் சத்திரக்காரன் கையில் பணத்தைக் கொடுத்து, 'இவனைக் கவனித்துக்கொள்; இதற்குமேல் ஏதாவது செலவானால் நான் திரும்பி வரும்போது உனக்குக் கொடுத்துவிடுகிறேன்' என்றார்.

இயேசு இந்தக் கதையைச் சொன்ன பிறகு, யோசிக்க வைக்கும் ஒரு கேள்வியை அந்த மனிதனிடம் கேட்கிறார். "இந்த மூன்று பேரில், கொள்ளைக்காரர்கள் கையில் மாட்டிக்கொண்டவனிடம் உண்மையிலேயே அன்பு காட்டியவர் யாரென்று நினைக்கிறாய்?" என்று கேட்கிறார்.

"சமாரியர்" என்று பதில் சொல்ல அவனுக்குத் தர்மசங்கடமாக இருந்திருக்கலாம். அதனால், "அவனிடம் இரக்கத்தோடு நடந்துகொண்டவர் தான்" என்று பதில் சொல்கிறான்.

அப்போது இயேசு, "நீயும் போய் அதேபோல் நடந்துகொள்" என்று சொல்கிறார். இப்படிச் சொல்வதன் மூலம் அந்தக் கதையின் முக்கிய கருத்தை அவனுக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறார்.

முனிவர் ஒருவர் தனிமையான இடத்தில் வாழ்ந்து வந்தார்.. அவரை பலரும் சென்று பார்த்து வருவார்கள். அவர் சில நிமிடங்கள் மட்டுமே அவர்களிடம் பேசுவார்

தமக்கு நிறைய வேலை இருக்கின்றது என்று அவர் எப்போதும் கூறுவார்.



அவரை சந்திக்க வந்த ஒரு மனிதன் உமக்கு அப்படி என்ன வேலை இருக்கின்றது? அமர்ந்து தவம் செய்வதுதானே உம்முடைய வேலை என்றான்.

அதற்கு பதிலளித்த அவர்: இல்லை எனக்கு நிறைய வேலை இருக்கின்றது என்றார். அதனையடுத்து

என்னிடம் இரண்டு கழுகுகள் இருக்கின்றன. அவற்றை நான் பாதுகாக்க வேண்டும் அவற்றுக்கான இரையைத் தேட வேண்டும் என்றார்.

என்னிடம் ஒரு பாம்பு இருக்கின்றது அந்த பாம்பு மற்றவர்களை தீண்டி விடாதவாறு நான் பாதுகாக்க வேண்டும் என்றார்.

என்னிடம் ஒரு கழுதை இருக்கின்றது அந்த கழுதைக்கு தேவையான உணவை நான் தேடிக் கொடுக்க வேண்டும் என்றார்.

என்னிடம் ஒரு குரங்கு இருக்கின்றது.அது எங்காவது தாவிச் செல்வதை நான் பாதுகாக்க வேண்டும் என்றார்.

என்னிடம் ஒரு சிங்கம் இருக்கிறது. அதன் கொடூரமான சிங்கக் குணத்தை மாற்றி அதை ஒரு அமைதியான சிங்கமாக உருவாக்க நான் பாடுபடுகின்றேன் என்றார்.

அதற்கு கேள்வி கேட்ட மனிதன், அவையெல்லாம் எங்கே இருக்கின்றன? என வினா தொடுத்தான்.

முனிவர் சிரித்துக்கொண்டே அவை அனைத்தும் எனக்குள்ளேயே இருக்கின்றன என்று தெரிவித்தார்.

இரண்டு கழுகுகள் என்பது எனது கண்கள் என்ற அவர், அந்தக் கண்கள் தீயவற்றை விலக்கி நல்லவற்றை மட்டுமே பார்ப்பதற்கும் கிரகிப்பதற்கும் நான் வேலை செய்கிறேன்.

பாம்பு என்பது எனது நாக்கு. பிறருக்கு நயவஞ்சகமாக எதையாவது அது கக்கி விடாமல் அதனை நான் பாதுகாக்க வேண்டும்.

குரங்கு என்பது என்னுடைய மனம். அது எப்போதும் அலை பாய்கின்றது. அது தீயதை சிந்திக்காமல் நல்லதை மட்டும் சிந்திப்பதற்கு அதை நான் முறையாக பாதுகாக்க வேண்டும். கழுதை என்பது என்னுடைய உடல். அதற்கு நான் உணவளித்து பாதுகாக்க வேண்டும். அதனை செயல்படுத்த பலப்படுத்த வேண்டும்.

சிங்கம் என்பது எனது இதயம்.அது எந்தளவு அன்பு, இரக்கம் பரிவுள்ளதாக இருக்க வேண்டுமோ அதற்கான முயற்சிகளை நான் செய்கின்றேன் என்று பதில் சொன்னார் அந்த முனிவர்.

நல்ல சமாரியன் உவமையும் அடுத்தவரிடம் அன்பு, இரக்கம், பரிவு காட்டுவதையே கூறுகிறது.

கடவுள் நம்மை அன்பு செய்கின்றார். அன்பு செய்யும் கடவுள் நாம் எம்மை அன்பு செய்வது போன்று அடுத்தவரையும் அன்பு செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார் அதனை நாம் செய்ய வேண்டும் என்றார் அருட்தந்தை.

எல்.செல்வா....

# கார்மேல் உத்தரிய மாதா திருவிழா ஜூலை 16 ல்

கத்தோலிக்கத் திருச்சபை எதிர்வரும் 16ஆம் திகதி கார்மேல் உத்தரிய மாதா திருவிழாவை கொண்டாடுகிறது.



பரிசுத்த பூமியாம் பாலஸ்தீன நாட்டின் மேற்குத் திசையில் மத்தியதரைக் கடலுக்கு அருகாமையில் உள்ள உயர்ந்த மலை கார்மேல் மலை என அழைக்கப்படுகிறது. கடற்கரையோரத்தில் அமைந்துள்ள இம்மலை பற்றி விவிலியத்தில் சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளன.

அதன் அழகிய சிகரம் எபிரேய மொழியில் " தோட்டம்" அல்லது "நடப்பட்ட திராட்சைத் தோட்டம்" என்ற சிறப்புப் பெயர் பெற்றிருக்கின்றது.

இந்த மலையில் எலியாஸ் இறைவாக்கினரும் அவருக்குப் பின் எலிசேயுஸ் என்பவரும் தங்கிச் செப தபங்களால் பல அரிய வல்லச் செயல்களை செய்து வந்தனர். இவர்கள் கார்மேல் மலை சன்னியாசிகள் என அழைக்கப்பட்டனர்.

இங்கிலாந்து நாட்டின் கேம்பிரிட்ஜில் கார்மேல் மாதா சபையைச் சேர்ந்த ஒரு மடம் இருந்தது. அச்சபையின் தலைவர் புனித சைமன்ஸ்தாக் என்பவராவார்.



1251ஆம் ஆண்டு ஜுலை மாதம் 16 ஆம் திகதி தேவ அன்னையின் அடைக்கலத்தை நாடி பக்தியாகச் செபித்துக் கொண்டிருந்தார். அச்சமயத்தில் அன்னை மரியாள் தமது கரத்தில் ஓர் உத்தரியத்தை ஏந்தியவராய் அவருக்குக் காட்சியளித்தார்.அவரைப் பார்த்து "என் பிரிய மகனே இதோ இந்த உத்தரியத்தை என் விருதாக வெற்றிச்சின்னமாக ஏற்றுக் கொள்.

இதை அணிந்து கொண்டு மரிக்கின்றவன் நித்திய நரக ஆக்கினையின்று தப்பித்துக் கொள்வான். இது பாதுகாப்பின் சின்னமாகவும் அட்டையாளமாகவும் ஆபத்தான சமயத்தில் கேடயமாகவும் என்னுடைய உதவியின் ஆரம்பமாகவும் இருக்கிறது." என்று சொன்னார்கள்.

1301 ஆம் ஆண்டு உத்தரியமாதா 22ஆம் அருளப்பர் என்ற திருதந்தைக்கு கனவில் தரிசனமாகி உத்தரியம் அணிந்த உத்தரியச் சபையார் மரித்து உத்தரிக்கிறஸ்தலத்திற்குப் போயிருந்தால் கூடிய விரைவில் நான் அவர்களை மீட்டுக் கொள்வேன் என்றார்.

மேலும் மரணத்திற்குப் பிறகு வரும் முதல் சனிக்கிழமைகளில் அவர்கள் அவ்விடத்திலிருந்து விடுதலையாவார்கள் என்றும் மொழிந்தார்கள். கார்மேல் மாதாவுடைய பேருதவியைக் கார்மேல் சபையினர் மட்டுமல்ல, அவரது உத்தரியத்தை அணியும் அனைவரும் பலன் அடைவார்கள்.

உத்தரியத்திற்குப் பதிலாக உத்தரியச் சுருபத்தை அணியலாம். இந்தப் பக்தியானது மோட்ச இராக்கினியின் ஞானபிள்ளைகளாக வாழ்வதற்கு உதவிபுரியும்.புனித கன்னிமரியாளைப் பின்பற்றி அவரைப் போல் பரிசுத்தமாய் வாழ்ந்து அவர்களுக்குச் சொந்தமானவர் என்று வெளிப்படையாக வாழ்ந்து காட்டுவது பெரும் பாக்கியமாகும்.பரிசுத்த உத்தரியத்தை நாமும் அணிந்து தீயோனிடமிருந்து நம்மைக் காப்போம். எல்லா நேரங்களிலும் உத்தரியமாதா நம்மைக் காத்திடுவாள் என்பது திண்ணம்.




திருமதி அருள்சீலி அந்தோனி...

# சொறிக்கல்முனை புனித அந்தோனியார் ஆலய திருவிழா







சொறிக்கல்முனை புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக கொண்டாடப்பட்டது. கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழா நிகழ்வுகளில் மூன்று நாள் நவநாள் ஆராதனைகள் இடம்பெற்று கடந்த சனிக்கிழமை வெஸ்பர்ஸ் ஆராதனையும் இடம்பெற்றது. அதனையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை திருத்தலத்தின் பங்குத்தந்தை லெஸ்லி ஜெயகாந்தன் அடிகளாரின் தலைமையில் அருட்தந்தை பிரைனர் அடிகளாரின் பங்கேற்புடன் திருவிழா திருப்பலி கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. புனித அந்தோனியாரின் திருச்சுரூப பவனி இறுதி ஆசிர்வாதம், கொடியிறக்கத்துடன் திருவிழா நிகழ்வுகள் நிறைவு பெற்றன. (படங்கள், தகவல்: சவளக்கடை குறூப் நிருபர்)

# நம் அயலான் யார்?

## இயேசு தரும் நல்ல சமாரியன் உவமை



இக்காலத்தில் நாம் வாழும் வாழ்க்கைச் சூழலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நற்செய்தி வாசகம் நம் வாழ்க்கைக்கு பெரும் படிப்பினையாக அமைந்துள்ளது.

பட்டப் பகலில் விளக்கைப் பிடித்துக் கொண்டு மனிதர்களைத் தேடிய டயோஜீனஸ் போன்ற அறிஞர்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். அப்படி ஒரு செயலில் ஈடுபட்டிருப்பதைப் போல் உணர்கிறேன். நானும் ஒரு விளக்கை எடுத்துக் கொண்டுஇ நடுப் பகலில் சூரியனைத் தேடுவதைப் போன்ற ஓர் உணர்வு.

கடந்த ஞாயிறு நற்செய்தியில் கூறப்பட்டுள்ள புகழ்பெற்ற ஓர் உவமை இப்படி ஓர் உணர்வை எழுப்பியுள்ளது.

'நல்ல சமாரியர்' என்ற இந்த உவமையைப் பற்றி பேசுவது கையில் விளக்கை எடுத்துக் கொண்டு சூரியனைத் தேடுவது போல் இருக்கும். இயேசுவின் எல்லா உவமைகளுக்கும் விளக்கம் தர முயலும் போது இந்த உணர்வு தான் எழும்!

ஆனால், மற்றொரு கண்ணோட்டத்தோடு இதைப் பார்த்தால் இயேசுவின் உவமைகள், அவரது கூற்றுகள்... ஏன்? விவிலியம் முழுவதுமே ஒரு கடல். அந்தக் கடலில் ஒவ்வொரு முறை மூழ்கும்போதும் ஏதாவது ஒரு முத்தை கையில் ஏந்தி கரை சேர முடியும்.

இந்தக் கண்ணோட்டத்தோடும் உணர்வோடும் நல்ல சமாரியர் என்ற உவமைக்குள் மூழ்கலாம். கடந்த ஞாயிறு சிந்தனையில் மூன்று முக்கிய அம்சங்களை நாம் பார்க்கலாம்.

முதலில்... இந்த உவமைக்குத் தரப்பட்டுள்ள "நல்ல சமாரியர்" என்ற பெயர். இரண்டாவது... இந்த உவமையை இயேசு சொல்வதற்குத் தூண்டுதலாய் இருந்த கேள்வி. மூன்றாவது... இந்த உவமையின் இறுதியில் இயேசு தரும் ஆலோசனை என்பன முக்கியத்துவம் பெறுகிறது.

'நல்ல சமாரியர்' என்ற இந்தத் தலைப்பு எங்கிருந்து வந்தது? நற்செய்தியில் இயேசு கூறுவதாக, லூக்கா 10: 33ல் நாம் வாசிப்பது இதுதான்:

"அவ்வழியே பயணம் செய்து கொண்டிருந்த சமாரியர் ஒருவர் அருகில் வந்து அவரைக் கண்டபோது..." சமாரியர் என்ற வார்த்தைதான் நற்செய்தியில் பயன்படுத்தப்பட்டுள்ளது. நல்ல சமாரியர் என்ற வார்த்தைகள் கிறிஸ்தவ பாரம்பரியத்தில் நாம் பயன்படுத்தும் வார்த்தைகள்.

இதேபோல் கல்வாரியில் இயேசுவுடன் அறையப்பட்டிருந்த இரு குற்றவாளிகளில் ஒருவரை நாம் 'நல்ல கள்வர்' என்று தலை முறை, தலைமுறையாய் அழைத்து வருகிறோம்.

இதுவும் நற்செய்தியில் சொல்லப்படாத ஓர் அடைமொழி. கள்வர்களில் நல்லவர் கெட்டவரா? .

யூதர்களிடம் யாராவது நல்ல சமாரியர் என்று சொன்னால் அவர்களும் சிரித்திருப்பார்கள். சமாரியர்களில் நல்லவர்களா? இருக்க முடியாது என்பது அவர்களது தீர்மானம்.

இப்படி யூதர்களில் தாங்களாகவே தீர்மானம் செய்துகொண்ட, தாங்களாகவே இலக்கணம் வகுத்துக் கொண்ட பலர் உள்ளனர்.

வரி வசூலிப்பவர், ஆயக்காரர், தொழுநோயாளிகள், என்று பலருக்கும் யூதர்கள் வகுத்திருந்த இலக்கணம்... அவர்கள் நல்லவர்கள் இல்லை கடவுளின் சாபம் பெற்றவர்கள்.

இந்த இலக்கணத்தை மாற்றி,இயேசு அவர்களில் பலரை நல்லவர்களாக்கி அரியணை ஏற்றியுள்ள நிகழ்ச்சிகளை நற்செய்தியில் வாசிக்கிறோம். அதுதான் இயேசுவின் அழகு.



நல்ல சமாரியர் என்ற இந்த இரு சொற்கள் லூக்காவின் இந்த உவமையைத் தாண்டி, நமது மனித குலத்தில் அன்று முதல் இன்று வரை பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படுகிறது.

எந்த ஒரு மனிதர் பிறருக்கு உதவி செய்கிறாரோ, அவருக்கு மதம், குலம், சமூக நிலை என்று எல்லாவற்றையும் கடந்து தரப்படுவது "அவர் ஒரு நல்ல சமாரியர்" என்ற அற்புதமான பட்டம். அந்த ளவுக்கு இவ்விரு சொற்களும் மனித குலத்தின் ஆழ் மனதில் இடம் பிடித்துள்ளன.

இரண்டாவது இயேசு இந்த உவமையைச் சொல்லத் தூண்டுதலாய் இருந்த அந்தக் கேள்வியைப் பற்றி சிந்தித்தால் இயேசுவைத் தங்கள் அறிவுத்திறனால், கேள்விகளால் மடக்கி விட நினைத்த பரிசேயர், மறை நூல் அறிஞர், சட்ட அறிஞர்.. இவர்களுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும். அவர்களது கேள்விகளுக்கு இயேசு சொன்ன பதில்கள், அற்புதமான,காலத்தால் அழியாத கதைகளாய் நமக்கெல்லாம் கிடைத்த அரிய பரிசுகள். இப்படி சொல்லப்பட்ட கதைகளில் உவமைகளில் ஒன்று தான் நல்ல சமாரியர் உவமை.

அருட்பணி எல்.எச்.ஜெரோம் ...

இயேசுவை அணுகிய சட்ட அறிஞரின் முதல் கேள்வி மிகவும் ஆழமானது. நிலை வாழ்வை, நிறை வாழ்வை அடைய வழி என்ன என்ற கேள்வி ஒரு மனிதரின் உண்மையான தேடலைப் போல் ஒலிக்கிறது. ஆனால், நற்செய்தியின் முதல் வரிகள் வித்தியாசமாகச் சொல்கின்றன. இந்த உவமை கூறப்பட்ட பின்னணி இதோ: லூக்கா 10: 2530

விடைகளைத் தெரிந்து கொண்டு கேள்விகள் கேட்பவர்களைப் பார்த்திருக்கிறோம்.

(மிகுதி அடுத்தவாரம்)

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் ஆனி மாதம் 28ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்ஹிஜ்ஜஹ் பிறை 11

### குறள் தரும் சிந்தனை



எண்ணிய எண்ணியாங்கு எய்து எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்

ஒன்றைச் செய்ய எண்ணியவர் அதைச் செய்து முடிப்பதற்கு ஏற்ற மனஉறுதியை உடையவராக இருந்தால், அடைய நினைத்தவற்றை எல்லாம் அவர் எண்ணப்படியே அடைவார்.

# ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் ஜனநாயக விரோதம்!

அரசாங்கத்தைப் பதவி விலகுமாறு கோரி கடந்த சனிக்கிழமை ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில், ஊடகவியலாளர்கள் தாக்குதலுக்குள்ளான சம்பவங்கள் பரவலாக நடந்துள்ளன. கடந்த வாரத்தில் இடம்பெற்ற எதிர்ப்புப் போராட்டங்களின் போது எல்லாமாக ஊடகவியலாளர்கள் பதினொரு பேர் தாக்குதலுக்கு உள்ளாகியிருப்பதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. அவர்களில் சிலர் வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

ஊடகவியலாளர்கள் தாக்குதலுக்கு உள்ளாவதோ அல்லது அடக்குமுறைக்கு உள்ளாவதோ முற்றிலும் ஜனநாயகத்துக்கு விரோதமான செயல்கள் ஆகும். உண்மை நிலைமை வெளியுலகுக்குக் கொண்டு வரப்படுவதைத் தடுப்பதற்காகவே ஊடகவியலாளர்கள் இவ்விதம் அடக்கியொடுக்கப்படுகின்றனர். அதாவது கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடனேயே இவ்வாறு ஊடகவியலாளர்கள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

இலங்கையில் மாத்திரமன்றி உலகெங்கும் இவ்வாறான நீதிக்குப் புறம்பான சம்பவங்கள் நடந்தேறுகின்றன. ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக இன, மத, கட்சி பேதங்கள் பாராமல் அனைவரும் இணைந்து குரல் கொடுக்க வேண்டியது அவசியமாகும். அப்போதுதான் நாட்டில் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்க முடியும்.

ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்படுவது, துன்புறுத்தப்படுவது, மிரட்டப்படுவது, சுதந்திரமாக செயற்பட விடாது தடுக்கப்படுவது போன்ற பலவிதமான சம்பங்கள் உலகில் இடம்பெற்றுக் கொண்டேயிருக்கின்றன. உலக நாடுகளில் இதுவரை கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காததாகும். அச்சம்பவங்கள் தொடர்பாக பலதரப்பினராலும் பலத்த கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்ற போதிலும், அவற்றுக்கான நீதி எட்டப்படுவதில்லை என்பதே உண்மை.

இலங்கையிலும் கடந்த காலத்தில் ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன. ஊடகவியலாளர்கள் தாக்குதலுக்குள்ளான சம்பவங்களும் அதிகம் நடந்துள்ளன. எனினும் அச்சம்பவங்களுக்கான நீதி நிலைநாட்டப்படவில்லை. அவ்வாறு நீதி நிலைநாட்டப்பட்டிருப்பின் மீண்டும் மீண்டும் அவ்வாறான வன்முறை சம்பவங்கள் இடம்பெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்காது. உரியவாறு விசாரணைகள் நடைபெற்று குற்றவாளிகள் தண்டிக்கப்படாததன் காரணமாகவே ஊடகவியலாளர்கள் மீதான வன்முறைகள் இன்றும் முடிவின்றித் தொடர்கின்றன.

ஊடகவியலாளர்கள் மீதான துன்புறுத்தல்கள் எங்கு இடம்பெறுகின்றனவோ அந்நாடு மீது சர்வதேசம் கண்டனங்கள் தெரிவிப்பது வழமை. ஊடகவியலாளர்கள் அடக்கியொடுக்கப்படுகின்ற நாட்டை ஜனநாயக நாடாக உலகம் ஏற்பதுமில்லை. உண்மைகள் மறைக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்துக்காகவே அவர்களின் குரல் நசுக்கப்படுகின்றது. எனவே ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக பணியாற்ற இடமளிப்பதே உண்மையான ஜனநாயகத்தின் பண்பாகும்.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, மறுபுறத்தில் மற்றொரு விடயம் குறித்தும் இவ்விடத்தில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஊடகப் பணிக்கு சுதந்திரம் உள்ளதென்பதற்காக ஊடக ஒழுக்கநெறியை முற்றாக மீறியவாறு தான்தோன்றித்தனமாக செயற்படுவது பெரும் தவறாகும். இன்றைய ஊடகங்கள் பலவற்றின் போக்கை அவதானிக்கின்ற போது, ஊடக ஒழுக்கநெறி எவ்வாறு மீறப்படுகின்றதென்பதை மக்களால் கண்கூடாகக் கண்டுகொள்ள முடிகின்றது.

உறுதிப்படுத்தப்படாத ஆதாரமற்ற செய்திகள், படங்கள், கட்டுரைகளை வெளியிடுகின்ற ஊடகங்களை அதிகம் காண முடிகின்றது. பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், வானொலிகள், இணையத்தளங்கள் பலவற்றில் இவ்வாறான ஊடகமீறல்களை தாராளமாகவே காணக் கூடியதாக உள்ளது. இணையத்தளங்கள் புரிகின்ற விஷமங்கள் ஏராளம். இணையத்தளங்கள் பலவற்றில் ஊடகஒழுக்கமென்பது சிறிதேனும் இல்லை.

அவை செய்திகளை உறுதிப்படுத்துவதில்லை, செய்திக்கான ஆதாரங்களைக் குறிப்பிடுவதில்லை. செய்தியொன்றை எவ்வாறு பக்குவமாக வெளியிடுவதென்ற ஒழுங்குமுறையையும் அவை கடைப்பிடிப்பதில்லை. வதந்திகளாக உலவுகின்ற கதைகளை வைத்தே அவை செய்திகளை தயாரித்து வெளியிடுகின்றன. இணையத்தளங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்வதற்கான உரிய கட்டமைப்பொன்று இல்லாத காரணத்தினால் அவை சட்டநடவடிக்கையிலிருந்து தப்பி விடுகின்றன.

ஆதாரமற்ற, புனைகதை போன்ற செய்திகளை வெளியிடுவதால் குறித்ததொரு தரப்பினர் பாதிக்கப்படுகின்றனர். ஊடகங்கள் நடுநிலைமையைக் கடைப்பிடித்து செயற்படுமானால் குற்றமற்றவர்கள் பாதிக்கப்படுவதற்கு இடமேயில்லை. இணையத்தளங்கள் ஒருபுறமிருக்க, சமூக ஊடகங்களிலும் இவ்வாறுதான் ஆதாரமற்ற அபத்தமான செய்திகள் அதிகளவில் வெளியிடப்படுகின்றன. ஊகங்களை அடிப்படையாக வைத்து கற்பனையாக செய்திகள் புனையப்படுகின்றன.

இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதென்பது இலகுவான காரியமல்ல. எனவேதான் அவற்றில் கற்பனையான செய்திகள் அதிகம் வெளிவந்து கொண்டிருக்கின்றன. எனினும் மக்கள் அச்செய்திகளை நம்புவதில்லை. பொழுதுபோக்குக்காகவும், சுவாரஸ்யத்துக்காகவுமே மக்கள் அவற்றைத் தேடுகின்றனர்.

இலங்கையின் ஊடகங்களைப் பொறுத்தவரை ஒழுக்கநெறியுடன் செயற்படும் ஊடகங்களும் உள்ளன, பொறுப்பற்ற முறையில் செயற்படுகின்ற ஊடகங்களும் உள்ளன. எவ்வாறாயினும் ஊடகவியலாளர்கள் எனப்படுவோர் பலவித சவால்களுக்கு மத்தியில் தங்களது கடமைகளை ஆற்றி வருகின்றனர். அவர்களது சிரமம் நிறைந்த கடமைப் பொறுப்புக்கு மதிப்பளிக்க வேண்டியது அனைத்துத் தரப்பினரதும் கடமையாகும். ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல் எவ்வடிவில் வந்தாலும் அது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

editor.tkn@lakehouse.lk

## ஒவ்வொரு வீட்டிலும் உணவுப் பயிர்ச் செய்கை;

# உணவு நெருக்கடியை முறியடிக்க வீட்டுத் தோட்டமே உகந்த தீர்வு

வீட்டுத் தோட்டத்தின் முக்கியத்துவம் பற்றி தற்போது பரவலாக பேசப்பட்டு வருகின்றது. நாட்டில் ஏற்பட்ட உணவு நெருக்கடிக்கு தீர்வு காணும் ஓர் அங்கமாக அரசாங்கத்தினால் வீட்டுத் தோட்டப் பயிர் செய்கை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வீட்டிலும் வீட்டுத்தோட்டம் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான காணிகளிலும் பொதுநிலங்களிலும் செய்கை பண்ணப்படாத நிலப்பரப்பிலும் பயிர்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டு வருகின்றது.

மேலும் அரச உத்தியோகத்தர்கள் மூன்று மாதகாலப் பகுதியில் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை நாளில் தங்கள் வீட்டுத்தோட்டங்களில் உணவுப் பயிர்களை பயிரிடுவதற்கு அரச உத்தியோகத்தர்களுக்கு சந்தர்ப்பமளிக்கப்பட்டுள்ளது. எனவே அரச உத்தியோகத்தர்கள், சாதாரண மக்கள் என்ற பாகுபாடில்லாமல் எல்லோரும் இணைந்து பயிர்ச்செய்கையிலும் வீட்டுத்தோட்டம் செய்வதிலும் அக்கறை செலுத்துவதன் மூலம் உணவு நெருக்கடிக்கு ஓரளவு தீர்வைக் காணக் கூடியதாகவிருக்கும்.

வீட்டுத்தோட்டத்தினூடாக நாட்டின் பொருளாதாரத்திற்கு நாம் பங்களிப்புச் செய்ய வேண்டும். மரக்கறிகளின் விலையேற்றத்துக்கு தீர்வாக வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கை உதவுகிறது. உற்பத்தி அதிகரித்தால் விலை ஏற்றம் குறையும். பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதன் மூலம் மரக்கறிகளின் விலைகள் குறைய வாய்ப்புள்ளது. எனவே அனைவரும் பயிர்ச்செய்கையில் ஈடுபட வேண்டும்.

பண்டைய காலத்திலிருந்தே மக்கள் தமது வீடுகளுக்கு அருகே மரக்கறிகள், பழவகைகள், சரக்குப் பயிர்கள், வாசனைப் பயிர்கள், பூக்கள், பலகைகள் பெறக் கூடிய மரங்கள் என்பவற்றை செய்கை பண்ணி வந்துள்ளனர். இதன் மூலம் சூழலை சுத்தமாகவும் அலங்காரமாகவும் வைத்திருப்பதில் நம் முன்னோர் ஆர்வம் கொண்டிருந்தனர். வீடுகளுக்கு அருகயுள்ள நிலத்தில் பயன்தரக் கூடிய தாவரங்களையும் அலங்காரத் தாவரங்களையும் செய்கை பண்ணுவதை வீட்டுத்தோட்டமாக கருத முடியும். இதற்கு 1/4ஏக்கர் அல்லது இதைவிட குறைந்தளவு இடம் போதுமானதாகும்.

நகர்ப்புறத்திலுள்ள வீடுகளில், குடியிருப்புகளில் காணப்படும் இடவசதி மட்டுப்படுத்தப்பட்ட தாகும். அவ்வாறான பிரச்சினை ஏற்படும் போது பின்வரும் முறைகளில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளலாம்.



சாடிப் பயிர்ச் செய்கை முறைகளைப் பயன்படுத்துதல்:

நிலைக்குத்துப் பயிர்ச்செய்கைமுறையான பயிர்ச்செய்கைக்கோபுரம், பயிர்ச் செய்கைக் குடை, பயிர்ச்செய்கை இறாக்கை, பயிர்ச்செய்கை ஏணி, பயிர்ச் செய்கை கூம்பகம் போன்றவற்றை பயன்படுத்துதல்.

மதில்சுவர், கூரை போன்றவற்றை ஆதாரமாகப் பயன்படுத்தி பயிர்செய்தல் போன்ற முறைகளைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியும். வீட்டுத் தோட்டத்தை வினைத்திறனாகப் பயன்படுத்தினால் வீட்டின் மரக்கறித் தேவையை பூர்த்தி செய்வதோடு வீட்டுக்கு வருமானம் ஈட்டக் கூடியதாகவும் இருக்கும். மக்கள் சுத்தமான புதிய மரக்கறி வகைகளை தாமாகவே உற்பத்தி செய்து கொள்வதே வீட்டுத் தோட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

அதிகரித்து வரும் சனத்தொகையின் தேவையை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் விவசாய பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது. மேலும் மக்கள் தமது வருமானத்தின் பெரும் பகுதியை உணவுப் பொருட்களுக்கு செலவிட வேண்டியுள்ளது. வாழ்க்கைச் செலவு அதிகரித்திருக்கின்றது. வறிய மக்கள் தமக்குத் தேவையான மூன்று வேளைக்கான உணவை பெற்றுக் கொள்ள இயலாத உணவு நெருக்கடி நிலை தற்காலத்தில் காணப்படுகின்றது. எனவே மக்கள் தமது வாழ்விடங்களில் காணப்படும் இடவசதிக்கேற்ப மரக்கறிகள், பழங்கள் என்பவற்றை உற்பத்தி செய்ய வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதாயின் முதலில் வீட்டுப் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும். அதற்கு அனைவரும் முதலில் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபட வேண்டும்.

எனவே ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்கள் வீடுகளுக்கு அருகிலுள்ள இடப் பரப்பில் மரக்கறிகள், பழங்கள், கிழங்கு, மூலிகைப் பயிர்கள் போன்ற பயனுள்ள தாவரங்களையும் அலங்காரத் தாவரங்களையும் செய்கை பண்ணுதல் மற்றும் கோழி ஆடு மாடு போன்ற விலங்குகளை வளர்ப்பதையும் வீட்டுத்தோட்டமாக கருத முடியும்.

வீட்டுத் தோட்டம் செய்வதனால் பல நன்மைகள்ஏற்படுகின்றன. போசணை உணவை பெறக்கூடியதாக இருக்கும், நஞ்சில்லாத புதிய உணவுகள் கிடைக்கும், உணவுப் பொருளுக்காக செலவு செய்யும் பணத்தைச் சேமிக்கலாம்,ஓய்வு நேரத்தை சிறந்த முறையில் பயன்படுத்தலாம், சிறந்த பொழுதுபோக்கு கிடைக்கும். உள்ளத்துக்கு சந்தோஷம், அமைதி கிடைக்கும்.

கத்தரி, கண்டங்கத்தரி, கறிமிளகாய், தக்காளி, முருங்கை, பாகல், புடோல், பீர்க்கு, கெக்கரி, பூசணி, பயற்றை, சிறகவரை, அகத்தி, பொன்னங்காணி, வல்லாரை, கங்குன், பசளி, மிளகாய், முளைக்கீரை,

வாழை, கொய்யா, பப்பாசி, ஆனைக் கொய்யா, கொடித்தோடை, நெல்லி, எலுமிச்சை, ரம்புட்டான், மா, தோடை, அன்னாசி, மரவள்ளி, கற்றாளை, சேம்பு, கொடிக்கிழங்கு, உள்ளூர்க் கிழங்குவகைகள், இஞ்சி, மஞ்சள், மிளகு, கோப்பி, கறிவேப்பிலை, ரம்பை, கற்றாளை, பலா, ஈரப்பலா, தென்னை, வெற்றிலை என்பவற்றைப் பயிரிட முடியும்.

வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையானது வீட்டுப் பொருளாதாரத்தை அதிகரிப்பதற்கு உதவுகின்றது என்பது குறிப்பிடத் தக்கது.



இஸ்மாயில் ஹுஸைன்தீன் (B.Ed)
(அம்பாறை விசேட நிருபர்)

# ஊடகவியலாளர் சக்திவேல் எழுதிய களுமுந்தன்வெளி முத்துமாரியம்மன் பாமாலை இறுவட்டு வெளியீடு

மட்டக்களப்பு மாவட்டம், களுமுந்தன்வெளி விநாயகர் கலைக் கழகத்தின் 36 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு களுமுந்தன்வெளி ஸ்ரீ முத்துமாரியம்மன் மீது பாடலாசிரியரும், ஊடகவியலாளருமான வ.சக்திவேல் எழுதிய பாமாலை இறுவட்டு வெளியீட்டு விழா அண்மையில் களுமுந்தன்வெளி முத்துமாரியம்மன் முன்றலில் இடம்பெற்றது.



இப்பாடல்களுக்கு கிழக்கிலங்கையின் புகழ்பூத்த இசைக்கலைஞரான நிஸ்கமானந்தராஜா டனுஷ்ஷியன் இசையமைத்துள்ளதுடன், இலங்கை வானொலியின் தேசியக் கலைஞரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான கலைச்சுடர் வீ.பத்மசிறி மற்றும் புகழ்பூத்த பாடகி செல்வி சுலக்ஷனி புவனேந்திரராசா ஆகியோர் இணைந்து பாமாலை பாடியுள்ளனர்.

களுமுந்தன்வெளி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய முன்றலில் விநாயகர் கலைக் கழகத்தின் தலைவரும் ஆசிரியருமான மு.சவுந்தரராசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு ஆன்மீக அதிதியாக களுமுந்தன்வெளி மாணிக்கப் பிள்ளையார் மற்றும் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயங்களின் பிரதமகுரு சிவஸ்ரீ த.கு. திருச்செல்வம் குருக்கள், பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக் கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் கட்புல தொழில்நுட்பத்துறையின் தலைவர் கலாநிதி.சு.சிவரெத்தினம், சிறப்பு அதிதிகளாக களுமுந்தன்வெளி கஜமுகன் வித்தியாலயத்தின் அதிபர் நா.ராமேஸ்வரன், களுதாவளை சிவசக்தி ஸ்ரீ முருகன் ஆலயத்தின் தலைவர் ஞா.யோகநாதன், செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் தலைவர் யோகராஜா, முன்னாள் அதிபர் வீ.கோபாலபிள்ளை பங்கேற்றனர். இந்நிகழ்வில் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

விநாயகர் கலைக்கழகத்தின் உபதலைவரும் ஆசிரியருமான ந.தரணிதரனின் வரவேற்புரையைத் தொடர்ந்து இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் மட்டக்களப்புக்கான தலைவர் த.வசந்தராஜா இறுவட்டை வெளியிட்டு வைத்தார்.

இறுவட்டின் முதற் பிரதியை மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் தலைவரும், மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் ஆலோசகருமான தேசபந்து எம்.செல்வராஜா பெற்றுக் கொண்டார்.







நயவுரையை கவிஞர் ம.ஜீவரெட்ணம் ஆசிரியர் நிகழ்த்தியதுடன், ஏற்புரையை பாடலாசிரியரும், ஊடகவியலாளருமான வ.சக்திவேல் நிகழ்த்தினார். நன்றியுரையை விநாயகர் கலைக்கழகத்தின் செயலாளர் யோ. கிவேதனும், நிகழ்ச்சித் தொகுப்பை கலைக்கழகத்தின் ஆலோசகர் தெ.சிவபாதமும் மேற்கொண்டார்கள்.

வடிவேல் சக்திவேல் கலைக்கழகத்தினரால், பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

# போதைவஸ்து பாவனையாளர்களின் மறைவிடமாக மீராநகர் கிராமோதய சுகாதார நிலையக் கட்டடம்!

அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட மீராநகர் பகுதியில் கவனிப்பாரற்றுக் கிடக்கும் கிராமோதய சுகாதார நிலைய க ட்டடத்தை போதைப்பாவனைக்கு அடிமையான இளைஞர்கள் தற்போது பயன்படுத்தி வருவதாக அப்பகுதி மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

இக்கட்டடமானது அக்கரைப்பற்று மீராநகர் பிரதேசத்தில் தனியார் நிறுவனமொன்றின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு 2006.08.31ஆம் திகதி அன்றைய சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் இப்பகுதி மக்களின் பாவனைக்கு ஒப்படைக்கப்பட்டது.

இக்கட்டடம் கடந்த காலங்களில் அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் கிராமிய சுகாதார நிலையமாக இருந்த வேளையில் கர்ப்பிணித் தாய்மார்களையும் குழந்தைகளையும் எடை பார்த்து, திரிபோஷா வழங்கும் இடமாகவும், கர்ப்பிணி தாய்மார்களின் கிளினிக் மத்திய நிலையமாகவும் சுகாதாரப் பிரிவினரால் பயன்படுத்தப்பட்டு வந்தது.

பின்னரான காலப்பகுதியில் இங்கு வழங்கப்பட்ட சேவைகள் வேறு இடங்களுக்கு மாற்றமடைந்தைத் தொடர்ந்து, இக்கட்டடத்தின் அறைகளில் மின்விசிறிகள், மின்விளக்குகள் மற்றும் அலுமாரி போன்ற பெறுமதியான பொருட்கள் உட்பட அனைத்தும் சேதமடைந்து காணப்படுகின்றன.

தற்போது இக்கட்டடம் இரவு வேளைகளில் போதைப்பொருளுக்கு அடிமையான இளைஞர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவர்கள் போதையை பாவிப்பது மாத்திரமின்றி மற்றவர்களுக்கு இடைஞ்சல் விளைவிக்கக் கூடிய சகல காரியங்களையும் செய்து வருகின்றனர். இதனால் இப்பிரதேச மக்கள் குறிப்பாக யுவதிகளும் தாய்மார்களும் மிகுந்த சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

இப்பகுதியில் பள்ளிவாசல், சமுர்த்தி காரியாலயம், ஆயுர்வேத மருந்தகம் போன்ற நிறுவனங்கள் உள்ளன. இவ்விடயங்களை சுட்டிக்காட்டி இக்கிராமோதய சுகாதார நிலைய கட்டடத்தினை மீளப்பயன்படுத்துமாறு இப்பகுதியைச் சேர்ந்த இளைஞர் கழத்தினால் அக்கரைப்பற்று மாநகர முதல்வர், அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோருக்கு ஆகியோருக்கு மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்கள் அல்லது பொதுமக்கள் பயன்படுத்தக் கூடியவாறு இக்கட்டடத்தை புனரமைப்பு செய்யுமாறு இப்பகுதி மக்கள் வலியுறுத்துகின்றனர்.





எம்.எஸ்.எம்.றிஸ்வான்
(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

# கிழக்கின் குரல்



## எரிபொருள் வழங்காததால் மட்டு.சமுர்த்தி

# அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பணிப் பகிஷ்கரிப்பில்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தயோகத்தர்கள் நேற்று (11) திங்கட்கிழமை பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதாக அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட கிளை தெரிவித்துள்ளது.

எரிபொருள் வழங்கப்படாமையால் கடமைகளை மேற்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்கொள்வதாகவும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு எரிபொருளை வழங்குமாறு கோரியும் அத்தோடு அத்தியாவசிய சேவை உத்தியோகத்தர்களுக்குள் சமுர்த்தி உத்தியோகத்தர்களையும் உள்வாங்குமாறு கோரியும் இந்த சுகயீன லீவு பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. நேற்று திங்கட்கிழமை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடமைக்கு சமூகமளிக்காததால் சமுர்த்தி வங்கிகளில் வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. அத்துடன் சமுர்த்தி மகா சங்கத்தின் வேலைகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் வழங்கப்படாததால் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் விஷேட கொடுப்பனவு வழங்குவதிலும் பாரிய சிரமங்களை எதிர் நோக்கியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

# எரிபொருளை பதுக்கி வைத்தால் கைது செய்யப்படுவர்

## அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் எச்சரிக்கை

**ஒலுவில் விசேட நிருபர்**



அம்பாறை மாவட்டத்தில் சட்ட விரோதமாக எரிபொருளை பதுக்கி வைத்து கூடுதலான விலைக்கு விற்பனை செய்பவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் தெரிவித்தார்.

தற்போது எரிபொருளுக்கான தட்டுப்பாடு நிலவி வருவதால் எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்து சிலர் எரிபொருட்களை பெற்று கூடுதலான விலைக்கு மறைமுகமாக விற்பனை செய்வதாக அறிய முடிகின்றது.

இதனால் அத்தியாவசிய சேவை, அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் பாதிக்கப்பட்டுள்ளதோடு பொது மக்களும் எரிபொருள் இல்லாமையினால் பல அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கூடுதலான விலைக்கு எரிபொருட்களை விற்பனை செய்யும் வீடுகள் மற்றும் வியாபார நிலையங்கள் பொலிஸாரினால் விசேட சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இச் சோதனையின் போது கைப்பற்றப்படும் எரிபொருள் அரச உடமையாக்கப்படுவதுடன் உரிய நபருக்கு எதிராக பாவனையாளர் அதிகார சபையினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

எரிபொருட்களை பதுக்கி வைத்திருப்போர்கள் சம்பந்தமாக பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் எரிபொருள் விநியோகம் செய்வதற்கு எரிபொருள் பங்கீட்டு அட்டை பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# கதிர்காம பாதயாத்திரிகர்களுக்கு காரைதீவில் பெரு வரவேற்பு



**காரைதீவு குறூப் நிருபர்**

யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி ஆயத்திலிருந்து கடந்த மாதம் புறப்பட்ட யாழ். கதிர்காம பாதயாத்திரை குழுவினருக்கு நேற்று காரைதீவில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பாதயாத்திரிகர்கள் கல்முனையில் இருந்து 57வது நாளில் காரைதீவை வந்தடைந்த போது அங்கு காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கே.ஜெயசிறில் இனிப்பு வழங்கி வரவேற்றார்.

கடந்த 12 வருடங்களாக பாதயாத்திரைக்கு தலைமை தாங்கி சென்ற வேல்சாமி மகேஸ்வரன் அடியார்களுக்கு தீப ஆராதனை செய்து வரவேற்க யாத்திரை ஆலோசகர் வி.ரி. சகாதேவராஜா வரவேற்புரையை நிகழ்த்தினார்.

தொடர்ந்து, பாதயாத்திரை அடியார்கள் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு வந்தடைந்து விசேட பூஜையில் கலந்து கொண்டார்கள். நேற்று காலை சித்தானைக்குட்டி மடாலயத்திற்கு அவர்கள் விஜயம் செய்தனர்.

## கன்னியா மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் பலி;

### ஒருவர் படுகாயம்

**ரொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கன்னியா பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்த நிலையில் மற்றுமொருவர் படுகாயம் அடைந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இவ்விபத்து நேற்று முன்தினம் (10) மாலை இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் திருகோணமலை அன்புவளிபுரம் பகுதியைச் சேர்ந்த டி.சுசிகரன் (40 வயது) உயிரிழந்துள்ளதாகவும், 33 வயதுடைய ஒருவர் படுகாயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். கன்னியா பகுதியில் இருந்து திருக்கோணமலைநோக்கிமோட்டார்சைக்கிளில் இருவரும் வந்து கொண்டிருந்தபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்து போக்குடன் (மதகுடன்) மோதி விபத்துக்குள்ளானதாக தெரியவருகிறது.

# தேசிய கல்வியியல் கல்லூரி ஆசிரிய மாணவர்களை சொந்த பிரதேச பாடசாலைகளுக்கு இணைக்கவும்

## இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம்

**ஒலுவில் விசேட நிருபர்**

நாட்டின் பொருளாதார நெருக்கடியினை கருத்திற் கொண்டு தேசிய கல்வியியல் கல்லூரி ஆசிரிய மாணவர்களை தத்தமது சொந்த பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்கு இணைப்புச் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜெஸ்மி எம். மூஸா தெரிவித்தார்.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளருக்கு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜெஸ்மி எம்.மூஸா, செயலாளர் எம்.கே.எம்.நியார் ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டிலுள்ள 19 தேசிய கல்வியியல் கல்லூரிகளில் இருந்து சுமார் 06 ஆயிரம் மாணவர்கள் பாடசாலைகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்கான வேதனமாக 05 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகின்றது. நாட்டின் தற்போதைய சூழலில் இத் தொகையினால் ஒரு வாரத்தைக் கூடக் கடத்த முடியாதுள்ளது. வெளி மாகாணங்களில் இருந்து வருகை தந்த ஆசிரிய மாணவர்கள் வாடகைக்கு இடங்களைப் பெற்றே தங்கள் பணிகளைத் தொடர வேண்டும். பொருளாதார நெருக்கடியான இக்காலப்பகுதியில் இது மிகவும் கடினமான இலக்காகுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்நிலைமைகளைக் கருத்திற் கொண்டு மாணவ ஆசிரியர்களை சொந்த வலயத்தில் பொருத்தமான பாடசாலையொன்றில் இணைப்புச் செய்ய வழி செய்வதோடு அவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவையும் அதிகரிப்புச் செய்யுமாறும் அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி

# ஆலயத்தில் தினமும் ஆயிரம் பேருக்கு அன்னதானம்



**காரைதீவு குறூப் நிருபர்**

வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் நேற்றிலிருந்து (11) ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று(11) திங்கட்கிழமை ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவ கொடியேற்றம் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

ஆலய பரிபாலன சபை தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் கூறுகையில்..

நேற்று கொடியேற்ற தினத்தில் இருந்து தினமும் பகல் வேளையில் ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

தொடர்ச்சியாக 18 நாட்கள் வழங்கப்பட்டு 28ஆம் திகதி சமுத்திர தீர்த்த உற்சவத்துடன் அன்னதான நிகழ்வு நிறைவு பெற இருக்கிறது.

ஆஸ்திரேலியாவில் வாழும் பரோபகாரி கனகலிங்கம் ஒன்றரை கோடி ரூபாய் செலவில் அன்னதானம் வழங்கவென ஆலயத்தில் அமைத்து கொடுத்த திருமூலர் திருமடத்திலே அன்னதான நிகழ்வு தொடர்ச்சியாக தினமும் இடம்பெற இருக்கின்றது.

இதற்கென்று அவர் அவுஸ்திரேலியாவிலிருந்து ஆயிரம் எவர்சில்வர் பீங்கான்களையும் அனுப்பி வைத்திருக்கின்றார்.

இந்த காலப்பகுதியிலே ஆலயத்திற்கு வரும் கதிர்காம பாதயாத்திரை அடியார்கள் மற்றும் ஊர் மக்கள் ,அடியார்கள் அனைவரும் இந்த பகல் அன்னதானத்திலே கலந்து கொள்ளலாம் என்று தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் மேலும் தெரிவித்தார்.

## ஆரையம்பதி

# மாவிலங்கத்துறையில் கைக்குண்டு மீட்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி மாவிலங்கத்துறையில் நேற்று (11) காலை கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

மாடு மேய்ப்பதற்காக சென்ற ஒருவர் வயல் காணி ஒன்றில் கைக் குண்டு ஒன்று கிடைப்பதை கண்டுள்ளார். இதையடுத்து இது தொடர்பாக காத்தான்குடி பொலிசாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து குறித்த இடத்துக்கு சென்ற காத்தான்குடி பொலிசார் கைக் குண்டை மீட்டதுடன் ஆரம்பக் கட்ட விசாரணைகளையும் மேற்கொண்டனர். இது தொடர்பாக விசாரணைகளை மேற் கொண்டுவருவதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர்.



‘ஈதுல் அழ்ஹா’ ஹஜ்ஜுப் பெருநாள் நபிவழி திடல் தொழுகை சாய்ந்தமருது 12 கடற்கரைத் திடலில் ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது.



புனித ஹஜ்ஜுப் பெருநாள் திறந்த வெளியிலான தொழுகை மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி மண்ணு ஸல்வா வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

படம்: கல்குடா தினகரன் நிருபர்



பாலமுனையில் நடைபெற்ற ஹஜ்ஜுப்பெருநாள் தொழுகை நிகழ்வு.

படம் பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்



அட்டாளைச்சேனை கோணாவத்தை முஹ்மீனின் பள்ளிவாயல் ஏற்பாட்டில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை முஹ்மீனின் பள்ளிவாசல் திடலில் மௌலவி என்.ஹிஜாஸ் முகம்மட் தலைமையில் நடைபெற்ற போது,...

படம்: ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஜூலை 12
செவ்வாய்க்கிழமை

# எமது கடல் வளத்தை அந்நிய நாட்டுக்கு விற்பதற்கு அனுமதிக்க மாட்டோம்

**மன்னார் குறூப் நிருபர்**

வடக்கின் பல பகுதிகள் அந்நிய தேசத்தவர்களுக்கு விற்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. அவை மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். மீனவ சமுதாயத்தின் மீன்பிடி பிரச்சினை தொடர்பான விடயங்களை கையாளும் போது அவர்களின் ஆலோசனைகளை கேட்டு செயல்படுத்த வேண்டும் என மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்களின் சமாச செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று திங்கட்கிழமை(11) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,,,,

நாங்கள் இன்றைய தினம் அவர்களுக்கு ஒரு வேண்டுகோளை முன் வைக்கின்றோம். தயவு செய்து எமது வளங்களை எமது மக்களுக்காக விட்டு வையுங்கள்.



எமது வளங்களை நீங்கள் அள்ளிச் செல்வதால் எமது மக்கள் மீண்டும் பட்டினி சாவை எதிர்கொள்கிறார்கள்.

வடபகுதியில் குறிப்பாக மன்னார் மாவட்டத்தை பொருத்தவரையில் எரிபொருள் அற்ற நிலையில் மாதக் கணக்காக மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

இதனால் கடலில் போடப்பட்டுள்ள அவர்களுடைய வலைகளை கூட கரைக்கு கொண்டு வர முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

எதிர் காலத்தில் இங்கு உள்ள அரசியல் தலைமைத்துவங்கள் இந்த நாட்டு மக்களுக்கு சொந்தமான வளங்களை அந்நிய நாட்டிற்கு விற்பதற்கு நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் .

அவ்வாறு ஒரு நிலை வருமாக இருந்தால் இலங்கை தேசத்தில் தற்போது ஒரு சம்பவம் நடந்தது போன்று வடமாகாணத்தில் இவ்வாறு ஒரு சூழ்நிலை உருவாகும் என்று இந்த நேரத்தில் எச்சரிக்கை விடுக்கின்றோம் என்றார்.

# தென்னிலங்கை அரசியல் மாற்றங்கள் எமது மக்கள் நலச் செயற்பாடுகளை பாதிக்காது

**யாழ்.விசேட நிருபர்**

தென்னிலங்கையில் ஏற்படுகின்ற அரசியல் குழப்பங்களும், அரசியல் மாற்றங்களும், எமது மக்கள் நலச் செயற்பாடுகளில் எந்தவிதமான மாற்றத்தினையும் ஏற்படுத்தாது என கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான யாழ். ராணி புகையிரத சேவை நேற்றைய தினம் திங்கட்கிழமை காலை ஆரம்பிக்கப்பட்டது.

அது தொடர்பில் கடற்தொழில் அமைச்சர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,..

கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றும் நூற்றுக் கணக்கான அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பணியாளர்களின் கோரிக்கைக்கமைய கிளிநொச்சிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.



குறித்த கோரிக்கை, சம்பந்தப்பட்ட தரப்புக்களினால் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையில், அதனை துறைசார்ந்த அமைச்சருடன் கலந்துரையாடி, இந்தச் சேவையை ஆரம்பிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்திருந்தேன்.

இச்சேவையினை வவுனியா வரையில் விஸ்தரிக்க வேண்டும் என்ற கோரிக்கையினையும் பல்வேறு தரப்பினரும் முன்வைத்து வருகின்றனர்.

அது தொடர்பாக ஆராய்ந்து, சாத்தியமான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.

எமது மக்கள் எமக்கு வழங்குகின்ற ஆணையினை எமக்கான பலமாகக் கொண்டு, தேசிய நல்லிணக்கத்தின் ஊடாக தென்னிலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாடி எமது மக்களின் எதிர்பார்ப்புகளையும் அரசியல் அபிலாசைகளையும் வென்றெடுப்பதே எமது வழிமுறையாக இருக்கின்றது.

# மன்னாரில் கிராம ரீதியான எரிபொருள் விநியோகம்



**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் நகர பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராமங்களுக்கு எரிபொருள் அட்டையின் ஊடாக எரிபொருள் விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று திங்கட்கிழமை (11) காலை தொடக்கம் இடம்பெற்று வருகின்றது.

மன்னார் தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள IOC எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மாவட்ட செயலகத்தின் ஒழுங்கமைப்பில் பிரதேச செயலகத்தின் கண்காணிப்பில் எரிபொருள் சுமுகமான முறையில் வழங்கப்பட்டு வருகின்றது.

அதன் அடிப்படையில் மோட்டார் சைக்கிள்களுக்கு 2000 ரூபாவிற்கும், முச்சக்கர வண்டிக்கு 2500 ரூபாவிற்கும், கார்களுக்கு 5000 ரூபாவிற்கும் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றது.

நேற்று திங்கட்கிழமை சௌத்பார், பனங்கட்டுகொட்டு மேற்கு,பனங்கட்டுகொட்டு கிழக்கு, பள்ளிமுனை கிழக்கு, பள்ளிமுனை மேற்கு, உப்புக்குளம் வடக்கு, உப்புக்குளம் தெற்கு,பெரியகடை, பெற்றா, சாவற்கட்டு, சின்னக்கடை ஆகிய 11 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கி எரிபொருள் வழங்கப்பட்டு வருகின்றது. நேற்று வழங்கப்படாத கிராமங்களுக்கு அடுத்தகட்ட எரிபொருள் வளங்களின் போது வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் கிராமத்தில் சிறுபோக அறுவடை பாதிப்பு

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளம் கிராமத்தில் சிறுபோக நெற்செய்கை அறுவடை செய்வதில் விவசாயிகள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த இரண்டாம் மாதத்தில் துணுக்காய் பிரதேச செயலாளரின் தலைமையில் சிறுபோக நெற்செய்கை கூட்டம் நடைபெற்று சிறுபோக நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்ட நிலையில் தற்போது அறுவடை மேற்கொள்வதற்கு எரிபொருள் பெற்றுக் கொள்ள முடியாததன் காரணமாக விவசாயிகள் அறுவடை எவ்வாறு மேற்கொள்வது என தெரியாத நிலையில் உள்ளனர்.

சிறுபோக நெற்செய்கை தொடங்கும் போதே எரிபொருள் நெருக்கடி காணப்பட்டது. பலத்த சிரமங்களுக்கு மத்தியில் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் தற்போது அறுவடை மேற்கொள்வதில் பலத்த சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

கிராம விவசாயிகளின் விபரங்கள் துணுக்காய் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. துணுக்காய் பிரதேச செயலாளர் எரிபொருளினைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# எரிபொருளின்றி பூநகரி பிரதேச சபையின் செயற்பாடுகள் பாதிப்பு

எரிபொருளின்றி புநகரி பிரதேச சபையின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருக்கு புநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் அவசர கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

"புநகரி பிரதேசத்தின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புநகரி, முழங்காவில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலமாக சபைக்கு தேவையான எரிபொருட்கள் நுகரப்பட்டு வந்துள்ளன.

எனினும் கடந்த இரு வார காலமாக எமக்குரிய எரிபொருள் விநியோகிக்கப்படவில்லை. எமது சபையின் வாகனங்களில் இருந்த எரிபொருள் நுகரப்பட்டு இன்றுவரை மட்டுப்படுத்தப்பட்ட சேவையினை செய்து வந்துள்ளோம். இன்றிலிருந்து அனைத்து சேவைகளும் நிறுத்தப்படும் நிலைமைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மக்களின் அன்றாட குடிநீர் விநியோகம், கழிவகற்றல் செயற்பாடுகள் நிறைவேற்ற முடியாத நிலைமைகள் எழுந்துள்ளன. இவ்வாறான நிலைமைகளை தெளிவுபடுத்தி பிரதேச செயலாளர், மாவட்டச் செயலாளர் ஆகியோருக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனினும் இன்றுவரை பதிலேதும் கிடைக்கவில்லை.

# யாழ்.-கிளிநொச்சி யாழ்.ராணி விசேட ரயில் சேவை





யாழ்ராணி புகையிரதம் காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் நேரம்

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| 6.00 | 06.18 | 06.40 | 07.00 | 07.12 | 07.57 | 08.05 | 08.30 |
| 14.00 | 14.08 | 14.39 | 14.59 | 15.11 | 15.56 | 16.04 | 16.10 |

காங்கேசன்துறையிலிருந்து முறிகண்டி வரை அனைத்து புகையிரத நிலையங்களிலும் நிறுத்தப்படும்

யாழ்ராணி புகையிரதம் முறிகண்டி மற்றும் கிளிநொச்சியிலிருந்து புறப்படும் நேரம்

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| | | 10.00 | 10.48 | 11.00 | 11.20 | 11.38 | 11.55 |
| 16.40 | 16.47 | 17.00 | 17.48 | 18.00 | 18.44 | 19.02 | 19.20 |

**பருத்தித்துறை விசேட,யாழ்.விசேட விசேட நிருபர்கள்**

யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் இடையே யாழ். ராணி என்ற விசேட ரயில் சேவை நேற்றைய தினம் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரச பணியாளர்கள் மற்றும் அறிவியல் நகர் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பணியாளர்களுக்கு வசதியாக இச்சேவையை ரயில் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. இதன்படி யாழ்.ராணியின் ரயில் சேவை காங்கேசன்துறையிலிருந்து காலை 06 மணிக்கு புறப்படும் புகையிரதம் காலை 8.11க்கு முறிகண்டியை அடையும்.

அங்கிருந்து மீண்டும், காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் புகையிரதம் காலை 11.20க்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும்.மீண்டும் பிற்பகல் 2 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் புகையிரதம் மாலை 4.10க்கு முறிகண்டியை வந்தடையும். முறிகண்டியிலிருந்து மீண்டும் 4.40க்கு புறப்படும் இந்தப் புகையிரதம் இரவு 7.20க்கு காங்கேசன்துறையை சென்றடையும்.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு ஒரு வழிக் கட்டணமாக 90 ரூபாய் கட்டணமும் யாழ்ப்பாணத்திலிருந்து பளைக்கு 60 ரூபாயும் யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமத்துக்கு 35 ரூபாயும் கட்டணம் அறவிடப்படும்.

# வவுனியாவில் பெற்றோல் வரிசையில் நின்றவர் மரணம்



**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் பெற்றோல் வரிசையில் நின்று விட்டு இளைபாறுவதற்காகச் சென்றவர் மயங்கி விழுந்து மரணமடைந்துள்ளார்.

நேற்று மதியம் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பண்டாரவன்னியன் சதுக்கம் பகுதியில் அமைந்துள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த 5 தினங்களாக பெற்றோல் வழங்கப்படாத நிலையில் மோட்டர் சைக்கிளை அரச உத்தியோகத்தர்களுக்கான வரிசையில் நிறுத்தி விட்டு குடும்பஸ்தர் ஒருவர் எரிபொருளுக்காக காவல் நின்றுள்ளார்.

நேற்று பெற்றோல் கிடைக்காமையால் நீண்ட நேரம் வரிசையில் நின்று விட்டு இளைப்பாறுவதற்காக நகர சபை முன்பாக உள்ள கடைப் பகுதிக்கு சென்ற போது குறித்த குடும்பஸ்தர் மயங்கி விழுந்துள்ளார்.

இதனையடுத்து, அவரை அருகில் நின்ற மோட்டார் சைக்கிளில் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும், அவர் வைத்தியசாலைக்கு கொண்டு வருவதற்கு முன்னரே இறந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மரணமடைந்தவர் வவுனியா நகரசபையில் சுகாதார ஊழியராக கடமையாற்றும் வவுனியா, கொக்குவெளி பகுதியைச் சேர்ந்த மாணிக்கம் செல்வகுமார் (வயது 44) என்பவராவார். மரணமடைந்தவரின் மோட்டார் சைக்கிள் பெற்றோல் வரிசையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கர்ப்பிணி தாய்மார்களுக்கு எரிபொருள் விநியோகம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் நடவடிக்கை

**பரந்தன் குறூப் நிருபர்**

விசேட சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிற மாவட்டங்களுக்குச் செல்லும் கர்ப்பிணி தாய்மாருக்கு, எரிபொருள் பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சித்து வருவதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கஷ்டமான நிலை மற்றும் விசேட சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிற மாவட்டங்களிற்கு செல்லும் கர்ப்பிணித் தாய்மாருக்காக எரிபொருளை பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றோம்.

ஏனையவர்கள் தமது பிரதேசத்தில் உள்ள மருத்துவ தாதிகளின் உதவியுடன் அருகில் உள்ள சிகிச்சை நிலையங்களிற்கு சென்று சிகிச்சை பெறவும், அல்லது போக்குவரத்துக்காக நோயாளர் காவு வண்டியை பயன்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

# நாரந்தனையில் நாளை சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் திருப்பதியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தான் தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவிலில் நாவலர் ஆண்டில் நடத்தப்பட்டு வரும் 'பௌர்ணமி விரதகால' சிறப்புச் சொற்பொழிவு ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை 13.06.2022 புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

நாவலர் குருபூஜையைத் தொடர்ந்து தலைமையுரையினை சிவகாந்தன் நிகழ்த்துவார்.

சிறப்புச் சொற்பொழிவினை இளம்சைவப்புலவர் சிவநெறிச்செம்மல் ச.நவநீதன்

'அன்பு நெறியும் அன்னை வழிபாடும்' என்னும் விடயப்பொருளில் நிகழ்த்துவார்.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

## மத்திய சுற்றாடல் அதிகார சபை

### இறுதி தீர்மான பொது அறிவித்தல்

**ஜா-எல/ஏக்-கல உத்தேசிக்கப்பட்ட கழிவுநீரை அகற்றும் இரண்டாம் கட்டத்திற்கான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சு.தா.ம) அறிக்கை**

**தேசிய சுற்றாடல் சட்டம்**

**பிரிவு 23வ (4) இன் கீழான அறிவித்தல்**

மேற்கூறப்பட்ட சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சு.தா.ம) அறிக்கையை ஆய்வு செய்ததன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையானது 1993 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க தேசிய தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் (முறை) ஒழுங்குவிதி 13 இற்கமைவாக குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் விசேட விதிகளுக்கமைவாக மேற்கூறப்பட்ட செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தினை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு வழங்க தீர்மானித்துள்ளது என்பதை இத்தால் பொதுமக்கள் யாவருக்கும் அறியத்தருகிறேன்.

**பணிப்பாளர் நாயகம்,**
**மத்திய சுற்றாடல் அதிகார சபை**
**'பரிசரபியச'**
**இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்லை**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு**

### உள்ளூர் அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டம்

### திட்ட அடையாளம் : P163305

### கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம்

01. உள்ளூர் அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டம் (LDSP) இன் செலவுகளுக்காக உலக வங்கியிலிருந்து ஒரு கடனை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு பெற்றுள்ளது அத்துடன் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ள உருப்படிகளுக்கான கட்டணங்களுக்காக இக்கடனின் ஒரு பகுதியை பயன்படுத்த எண்ணியுள்ளது.
02. கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவாறு தகைமையும் தகுதியும் உடைய விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை மட்டக்களப்பு, செங்கலடி, ஏறாவூர்பற்று பிரதேச சபையின் சார்பாக உள்ளூர் அதிகாரசபையின் பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.
03. தேசிய போட்டி கேள்விகோரல் (NCB) பெறுகையின் ஊடாக விலைமனுக்கள் நடத்தப்படும்.
04. ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருத்தல் வேண்டும் அத்துடன் சர்வதேச தரத்திலான சோலார் பவர் அமைப்புகளின் வழங்கல் சேவை மற்றும் பராமரிப்புகளுக்கும் இலங்கையில் பரவலான வழங்கல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
05. தகைமை தேவைப்பாடுகள் விலைமனு ஆவணங்களின் பிரிவு 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணங்களின் விலைமனு தரவுகள் (பிரிவு 5) இல் தரப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மட்டக்களப்பு, செங்கலடி, ஏறாவூர்பற்று பிரதேச சபை, தலைவர்/ செயலாளர், (தொ.பே-0652240536, பெக்ஸ்:065-2240506) இடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் விலைமனு ஆவணங்களை அதே இடத்தில் எந்த வேலை நாட்களிலும் 900 மணிமுதல் 16.00 மணிவரை பரிசீலிக்கலாம்.
07. ஓர் மீளளிக்கப்படாத கட்டணம் ரூ.1500 கட்டணத்தை செலுத்துவதன் பேரில், 2022.07.12 முதல் 2022.07.25ம் திகதி 9.00 மணிமுதல் 15.00 மணிவரை மட்டக்களப்பு செங்கலடி, ஏறாவூர்பற்று பிரதேச சபை, தலைவர்/ செயலாளருக்கு ஓர் எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
08. விலைமனுக்கள் 2022.07.26ம் திகதி 15.00 மணிக்கு அல்லது அதற்கு முன் செங்கலடி, ஏறாவூர்பற்று பிரதேச சபை தலைவருக்கு விநியோகிக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது சமுகமளிக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டவுடன் உடனடியாகத் திறக்கப்படும்.
09. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதி நேரத்திற்குப் பின்னர் 2022.09.27 வரை செல்லுபடியாதல் வேண்டும்.
10. அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் ஓர் விலைமனுப்பிணையை விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும்.
11. விலைமனுவுக்கு முன்னரான கூட்டம் 2022.07.18 - 10.00 மணிக்கு செங்கலடியில் உள்ள ஏறாவூர்பற்று பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அவர்களது சொந்த செலவில் விலைமனுவுக்கு முன்னரான கூட்டத்தில் சமுகமளிக்கலாம்.
12. ஒப்பந்தங்கள் வழங்குவதில் பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதி தீர்மானமாக அமையும்.
13. ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு முன்பு எந்த வேளையிலும் இந்த பெறுகையினை இரத்துச் செய்யும் அல்லது வாபஸ்பெறும் உரிமையை தொழில்தருநர் கொண்டிருப்பார்.

| வேலைகளின் விபரம் மற்றும் விலைமனு இல | ஒப்பந்த காலம் கலெண்டர் நாட்கள் | தேவைப்படும் விலைமனுப்பிணை | |
|---|---|---|---|
| | | விலைமனுப் பிணைத் தொகை (ரூ) | செல்லுபடி யாகும் காலம் |
| செங்கலடி ஏறாவூர்பற்று பி.ச.பிரதான அலுவலகத்திற்கு 18KW - சோலாப்பவர் அமைப்பை வழங்கி பொருத்துதல் | 60 நாட்கள் | 34,000.00 | 2022.10.25 |

**தலைவர்**
**உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு,**
**ஏறாவூர்பற்று பிரதேச சபை, செங்கலடி**
**12.07.2022**

## இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/22/ PT/07/016 | GI Channel 150x50x 20x2MM: 6M Length | **60,000.00** | **1,000.00** | 2022.07.25 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குநராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச்சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2022 ஜூலை 12 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழ்யுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

## அரசாங்க அறிவித்தல்

### இலங்கை பரீட்சைத் திணைக்களம்

**பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை – 2022**

மேற்படி பரீட்சை 2022 நவம்பர் மாதம் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளமையை அறியத்தருகின்றேன். விண்ணப்பப்படிவங்கள் ஒப்படைக்கப்பட வேண்டிய **இறுதித் திகதி 2022.07.29** ஆகும்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு அரசாங்கப் பாடசாலையொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையொன்றில் தரம் 5இல் கல்வி பயிலும் மாணவர்கள் மாத்திரமே தோற்ற முடியும்.

2023 ஜனவரி 31ஆம் திகதியன்று 11 வயதுக்குக் குறைந்த 10 அல்லது 10 வயதுக்கு மேற்பட்ட குறைந்த வருமானம் உடைய மாணவர்களுக்கு மாத்திரமே உதவிப்பணம் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் நிகழ்நிலை முறைமையிலேயே (Online) அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள், பிரமாணங்கள், பயநர்பெயர், கடவுச்சொல் ஆகியன சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு கிடைக்கப்பெறாத பாடசாலைகள் இருப்பின் அப் பாடசாலை அதிபர்கள் பரீட்சை ஆணையாளர், பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளைக்கு கீழே தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களூடாக தொடர்பு கொண்டு தாமதிக்காது விண்ணப்பிக்க வேண்டும்.

விசேட தேவைகளுடைய மாணவர்களுக்காக விண்ணப்பிக்க வேண்டிய விதம் தொடர்பான அறிவுறுத்தல்கள் அறிவுறுத்தற் பத்திரத்தில் விவரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விசாரணை :

| | |
|---|---|
| தொலைபேசி இலக்கம் | : 011-2784537, 011-2786616, 011-2784208 |
| | : 011-2786200, 011-2784201, 011-2785202 |
| நேரடி தொலைபேசி இலக்கம் | : 1911 |
| தொலைநகல் இலக்கம் | : 011-2784422 |
| தபால் முகவரி | : பரீட்சை ஆணையாளர் நாயகம் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல. |

**எல்.எம்.டீ. தர்மசேன**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**

**6/5/புலமைப்பரிசில்/2022**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**
**பெலவத்தை, பத்தரமுல்ல.**
**2022.07.07**


சீட்டிலுக்கப்பட்ட திகதி 10.07.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4811
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,410,020.00
அச்சிடப்பட்ட திகதி : 09.07.2022
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 4 5 1 5 5 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,422,758.40

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 120
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,362,600.00
லொத்தர் சீட்டு அச்சிடப்பட்ட திகதி 09.07.2022
இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 43 51 54 57
விசேட இலக்கினம் விருச்சிகம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,964,502.40

தன நிதானய
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /07/09
சீட்டிழுப்பு இலக்கம் : 841
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 629,440.00
V 04 09 44 71
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 117,595,222.00

ஜாதிக சம்பத
அச்சிடப்பட்ட திகதி 09.07.2022
சீட்டிழுப்பு இலக்கம் 1289
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 469,140.00
வெற்றி இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 2 6 3 7 6 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,178,970.00

கொவிசெத Govisetha
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி 2022.07.09
சீட்டிழுப்பு இலக்கம் 3053
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,171,800.00
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 17 25 69 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,211,965.60

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1159
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022.07.09
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 840,160.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 260,269,906.00
ஆங்கில எழுத்து J சுப்பர் நம்பர் 08 வெற்றி எண்கள் 04 29 76 77
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01


Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு குறித்து பொது மக்களுக்கான விசேட அறிவிப்பு

வெளிநாட்டு வேலைவாய்ப்பு குறித்து பொது மக்கள் மத்தியில் ஆர்வம் காணப்பட்டு வருகின்ற நிலையில் அவர்களை இலக்கு வைத்து பல்வேறு மோசடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறித்து எமக்கு அறியக் கிடைத்துள்ளது. குறிப்பாக ருமேனியா, ஜப்பான், தென் கொரியா, இஸ்ரேல் மற்றும் போலாந்து ஆகிய நாடுகளில் வேலைவாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொய்யான தகவல்களைக் கூறி பல்வேறு ஊடகங்களின் வாயிலாக பொதுமக்களை ஏமாற்றும் முயற்சிகளை சில மோசடிக்காரர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யப்பட்டு அதற்கான உரிய ஆவணத்தை பெற்றுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள் மற்றும் அந்த நிறுவனத்தின் வலைதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைவாய்ப்பு தொடர்பான அனைத்து தகவல்களையும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் வலைதளத்தின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு குறித்த வேலைவாய்ப்புக்காக பணம் மற்றும் உங்கள் கடவுச்சீட்டை வழங்குவதற்கு முன்பாக குறித்த வேலைவாய்ப்பு நிறுவனம் சட்டரீதியாக நிறுவப்பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்து பார்க்குமாறு கேட்டுக் கொள்கின்றறோம்.

**இது தொடர்பான அனைத்து தகவல்களையும் www.slbfe.lk வலைதளத்தின் ஊடாகவோ, 1989 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவோ 24 மணிநேரமும் பெற்றுக் கொள்ள முடியும்.**

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்**
**அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்பு**


The easiest & convenient way to send your
Marriage Proposal Ads,
classified@lakehouse.lk
SUNDAY OBSERVER Marriage Proposals
for 15 Words - Rs. 1,000/- Easy way to make your payment :- BOC - Acc.No. 000000377 Online Transfer
For Inquiries - Piyumi - 011 2 429 383 | Ramani - 011 2 429 347 | Gayani - 011 2 429 342 / 343

# லங்கா சோல்ட் லிமிடெட்

## வெற்றிடங்கள்

**"2022 ஜூலை 01ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் இரத்துச் செய்யப்படுகின்றது என்பதுடன் இதுவே சரியான விளம்பரம் என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும்"**

SLS, ISO 9001:2015, ISO 22000:2018 அங்கீகாரத்துடன் நாட்டின் மிகப்பெரிய உப்பு உற்பத்தியாளரான லங்கா சோல்ட் லிமிடெட் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்குத் தகுந்த தகுதியுள்ள நபர்களின் சேவைகளைப் பெற விரும்புகிறது.

சிறந்த விண்ணப்பதாரர்கள் புகழ்பெற்ற நிறுவனங்களில் தொடர்புடைய துறைகளில் முன் அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும். அவர்கள் விழிப்பாகவும், சுறுசுறுப்பாகவும், புத்திசாலியாகவும் இருக்க வேண்டும்.

### பிரதான நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர் பதவி - அதிமேற்தரம் HM-2-1

**வேலை விவரங்கள்**

பிரதான நிறைவேற்று அதிகாரி (CEO)/ பொது முகாமையாளர் என்பவர் இதன் பணிப்பாளர் சபையினால் பதவிக்கு ஒதுக்கப்பட்ட நிறுவனத்தின் முகாமைத்துவ செயல்பாடுகளுக்கு ஒட்டுமொத்த பொறுப்பானவராவார். நிறுவனத்தின் தலைவராக CEO/ பொது முகாமையாளர் நிறுவனத்தின் அனைத்து விவகாரங்களுக்கும் பதிலளிக்கக்கூடியவராகவும் மற்றும் பொறுப்பாகவும் இருப்பார். மேலும் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு நேரடியாக தெரிவிக்கக் கூடியவர். மேலும் CEO/GM நிர்வாகத் தகவல், அறிக்கைகள் மற்றும் சபை ஆவணங்களை பணிப்பாளர் சபைக்கு தகவல் மற்றும் முடிவெடுக்கும் நோக்கங்களுக்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**நியமனத்தின் தன்மை:**

இது லங்கா சோல்ட் லிமிடெட் ஊழியர்களுக்கென அங்கீகரிக்கப்பட்ட நன்மைகள் மற்றும் மேற்படி பதவிக்கான உரிமையுடன் கூடிய முழு நேர அடிப்படையிலான நியமனமாகும். லங்கா சோல்ட் லிமிடெட்டின் பணிப்பாளர் சபை, பிரதான நிறைவேற்று அதிகாரி (CEO)/ பொது முகாமையாளர் பாத்திரத்தை நிறைவேற்ற தேவையான தகுதிகள் மற்றும் அனுபவத்துடன் நிலையான கால ஒப்பந்தத்தில் ஒரு நபரை நியமிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

**தேவையான தகுதி மற்றும் அனுபவம்:**

**வெளிவாரி**

01 IESL, ICA(SL), ACCA, CIMA, CMA என்பவற்றால் வழங்கப்பட்ட முழுமையான தொழில்சார் தகுதிகள் அல்லது அதற்கு சமமான தகுதி

**அல்லது,**

02. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞான இளமாணி (B.Sc) துறையில் பொறியியல், பௌதிகவியல், உயிரியல், இரசாயனவியல், வர்த்தக முகாமைத்துவம், நிதிக் கணக்கியல், சந்தைப்படுத்தல், தர முகாமைத்துவம், வர்த்தக இளமாணி (B.Com), பொது நிர்வாகம் அல்லது அதற்குச் சமமான தகைமை.

**மற்றும்**

கணக்கியல் நிதி, பொது நிர்வாகம், வியாபார நிர்வாகம், பொறியியல், விஞ்ஞானம், முகாமைத்துவம் என்பவற்றில் பட்டப் பின்படிப்புத் தகைமை (MBA, MSC) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தால் வழங்கப்பட்ட ஏனைய தொழில்சார் தகுதி.

**அத்துடன்**

இயைபுடைய துறையில் நிர்வாக மட்டத்தில் குறைந்தபட்சம் 12 வருட கால அனுபவம், அதில் 7 வருடங்கள் அரசு, அரச கூட்டுத்தாபனங்கள், சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனம்/நிறுவனத்தில் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவுடன் சிரேஷ்ட நிர்வாக மட்டத்திலாக இருத்தல் வேண்டும்.

**அல்லது,**

03. இலங்கை நிர்வாக சேவை (SLAS)/ இலங்கை திட்டமிடல் சேவை (SLPS)/ இலங்கை கணக்கியல் சேவை (SLACS) என்பவற்றில் 1ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களும் பொது சேவையிலிருந்து முழு நேர இரண்டாம் நிலை அடிப்படையில் தங்கள் அமைச்சுத் தலைவர்கள் ஊடாக விண்ணப்பிக்கலாம்.

**உள்வாரி:**

உயர் முகாமைத்துவ வகுதியில் (HM 1-3) உதவிப் பொது முகாமையாளர் பதவியில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் திருப்திகரமான சேவையுடன் இயைபுடைய துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 18 வருடங்கள் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அதில் 10 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவத்திலாக இருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞான இளமாணி (B.Sc) துறையில் பொறியியல், பௌதிகவியல், உயிரியல், இரசாயனவியல், வர்த்தக முகாமைத்துவம், நிதிக் கணக்கியல், சந்தைப்படுத்தல், தர முகாமைத்துவம், B.Com, B.A., பொது நிர்வாகம் அல்லது அதற்குச் சமமான தகைமை.

**அத்துடன்**

கணக்கியல் நிதி, பொது நிர்வாகம், மனிதவள முகாமைத்துவம், வியாபார நிர்வாகம், பொறியியல், விஞ்ஞானம், முகாமைத்துவம் என்பவற்றில் பட்டப் பின்படிப்புத் தகைமை (MBA, MSC) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தால் வழங்கப்பட்ட ஏனைய தொழில்சார் தகுதி

மற்றும் நிறுவன இலக்குகளை அடைய பலதரப்பட்ட குழுக்களை வழிநடத்தும் மற்றும் தலைமைத்துவத் திறன் மற்றும் மனித மற்றும் பிற வளங்களை நிர்வகித்தல்

**வயதெல்லை:** 45 வயதுக்கு குறையாமலும் 62 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். அரசு, அரச கூட்டுத்தாபனங்கள், சபை மற்றும் உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல

**சம்பள அளவு** : HM-2-1: ரூ. 93,020 -12 x 2700 = 125,420/=

### உதவிப் பொது முகாமையாளர் (நிதி) பதவி - HM 1-1

**வேலை விவரம்: முக்கிய பொறுப்பு பரப்பு:**

வருடாந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் பணியைச் செய்வதற்கு பிரதிப் பொது முகாமையாளருக்கு உதவுதல்.

முகாமைத்துவ நிதியில் சிறப்பு கவனம் செலுத்தி வருடாந்த அடிப்படையில் நிதி வேலை திட்டங்கள் மற்றும் அனைத்து கொடுப்பனவுகளை இயக்குதல் மற்றும் உருவாக்குதல்.

நிறுவனத்தின் பரிவர்த்தனைகள், நிதி ஒழுங்குவிதிமுறைகள், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள் மற்றும் நிறுவனத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்தல்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகள் மற்றும் நடைமுறைகளுடன் முழு இணக்கத்தை உறுதி செய்வதில் உயர் நிர்வாகத்திற்கு உதவுதல்.

**நியமனத்தின் தன்மை:** லங்கா சோல்ட் லிமிடெட் ஊழியர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட நன்மைகள் மற்றும் குறிப்பிட்ட பதவிக்கான உரிமைத்துவத்துடன் நிரந்தர பதவி.

**தேவையான தகைமை மற்றும் அனுபவம்:**

**வெளிவாரி:**

1. ICA(SL), ACCA, CIMA, CMA ஆகியவற்றின் முழுமையான தொழில்சார் தகைமை அல்லது இயைபுடைய துறையில் 05 வருட அனுபவத்துடன் சமமான தகைமை

**அல்லது**

2. வணிகவியல், கணக்கியல், நிதி முகாமைத்துவம், B.Com, பொது/ வியாபார நிர்வாகம் ஆகியவற்றில் இளமாணிப் பட்டம் அல்லது ICA (SL), ACCA, CIMA, CMA என்பவற்றில் இடைநிலைத் தகைமை அல்லது அதற்கு சமமான தகைமையுடன் அரச, அரச கூட்டுத்தாபனம், சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனத்தில் இயைபுடைய துறையில் 12 வருட கால அனுபவம்.

**உள்வாரி:**

மேலே குறிப்பிட்டுள்ள கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளுடன் பதவிக்கு தொடர்புடைய கணக்கியல் மற்றும் நிதியியல் பாடப் பகுதியில் நடுத்தர முகாமைத்துவ வகுதியில் (MM 1-3) முகாமையாளர் பதவியில் குறைந்தபட்சம் 10 வருடங்கள் திருப்திகரமான சேவை.

**சம்பள அளவு:** HM 1-1 ரூ. 80295 -15x2270 = 114345/-

**வயதுதெல்லை:** 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அரச, அரச கூட்டுத்தாபனம், சபை மற்றும் உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

### உள்ளக கணக்காய்வாளர் பதவி - MM 1-1

**வேலை விவரம்: முக்கிய பொறுப்பு பரப்புகள்:**

வருடாந்த கணக்காய்வுத் திட்டத்திற்கு ஏற்ப உள்ளக கணக்காய்வுப் பணியைச் செய்ய உதவிப் பொது முகாமையாளர் - கணக்காய்வு மூலம் தலைவருக்கு அறிக்கை அளித்தல்.

- முகாமைத்துவ கணக்காய்வுகளில் சிறப்பு கவனம் செலுத்தி வருடாந்த அடிப்படையில் உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை உருவாக்குதல்
- நிறுவனத்தின் பரிவர்த்தனைகள், நிதி ஒழுங்கு விதிமுறைகள், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள் மற்றும் நிறுவனத்தின் MOP ஆகியவற்றுடன் இணங்குவதை உறுதிசெய்தல்
- ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகள் மற்றும் நடைமுறைகளிலிருந்து ஏதேனும் விலகலைச் சரிசெய்ய உயர் நிர்வாகத்திற்கு உதவுதல்

**நியமனத்தின் தன்மை:** லங்கா சோல்ட் லிமிடெட் ஊழியர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட நன்மைகள் மற்றும் மேற்படி பதவிக்கான உரிமைத்துவத்துடனான நிரந்தர பதவி.

**தேவையான தகுதி மற்றும் அனுபவம்:**

**வெளிவாரி:**

1. ICA(SL), ACCA, CIMA வழங்கிய முழுமையான தொழில்சார் தகைமைகள் அல்லது தொடர்புடைய துறையில் 01 வருட அனுபவத்துடன் சமமான தகைமை.

**அல்லது**

2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞான இளமானி (B.Sc) துறையில் கணக்கியல், நிதி முகாமைத்துவம், வியாபார நிர்வாகத்தில் வர்த்தக இளமாணி, (B.Com) பொது நிர்வாகம் அல்லது ICA (SL), ACCA, CIMA, CMA என்பவற்றில் இடைநிலைத் தகைமை அல்லது அதற்கு சமமான தகைமையுடன் அரச, அரச கூட்டுத்தாபனம், சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனத்தில் இயைபுடைய துறையில் 03 வருட கால முகாமைத்துவ அனுபவம்.

**உள்வாரி:**

மேலே குறிப்பிட்டுள்ள தேவையான கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளுடன் பதவிக்கு தொடர்புடைய கணக்கியல் / கணக்காய்வு விடயப்பரப்பில் கனிஷ்ட நிறைவேற்றுநர் (JM 1-1) பதவியில் குறைந்தபட்ச 03 வருடங்கள் திருப்திகரமான சேவை.

**அத்துடன்**

நிறுவன இலக்குகளை அடைய பலதரப்பட்ட குழுக்களை வழிநடத்தும் மற்றும் தலைமைத்துவத் திறன் மற்றும் மனித மற்றும் பிற வளங்களை நிர்வகித்தல்

**வயதெல்லை:** 30 வயதுக்கு குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். அரசு, அரச கூட்டுத்தாபனங்கள், சபை மற்றும் உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல

**சம்பள அளவு :** MM 1-1 : ரூ 53,175- 10x1375 + 15x1910 = 95,575/-

### இரசாயனவியலாளர் பதவி - MM 1-1

**வேலை விவரம்/ முக்கிய பொறுப்பு பகுதிகள்:**

பின்வரும் முக்கிய செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு சிரேஷ்ட இரசாயனவியலாளர் மற்றும் உற்பத்திக்கான உதவிப் பொது முகாமையாளருக்கு உதவுதல்.

1. ஆய்வகத்தை பராமரித்தல் மற்றும் கொடுக்கப்பட்ட அளவுருக்கள் / தர நிலைகளின்படி உப்பு பொருட்கள் மற்றும் உப்பு நீரின் சோதனைகளை மேற்கொள்ளுதல்.
2. அனைத்து உப்பளங்களுக்குமான உப்புப் பொருட்கள் மற்றும் உற்பத்தி செயல்முறைக்கான தராதரத் தரங்களைப் பராமரிப்பதை உறுதிசெய்தல்.
3. ஆய்வகத்திற்கு தலைமைத்துவத்தை வழங்குதல்
4. மாதிரிகளைத் தொடர்ந்து சரிபார்த்து, தேவையான தராதரத் தரங்களை உறுதிப்படுத்துதல்.

தொழிற்சாலைகள் / பொறித்தொகுதிகள் மற்றும் ஒவ்வொரு உப்பு உற்பத்தி செயல்முறையுடன் நெருக்கமாக வேலை செய்தல்.

**நியமனத்தின் தன்மை:** லங்கா சோல்ட் லிமிடெட் ஊழியர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட நன்மைகள் மற்றும் மேற்படி பதவிக்கான உரிமைத்துவத்துடனான நிரந்தர பதவி.

**தேவையான தகுதி மற்றும் அனுபவம்:**

**வெளிவாரி:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இரசாயனவியல், உயிரியல், பௌதீகவியல், தர முகாமைத்துவம் அல்லது உற்பத்திப் பொறியியல் ஆகியவற்றில் இளமாணிப் பட்டம் அல்லது அதற்கு சமமான தகுதியுடன் தொடர்புடைய துறையில் 03 வருட அனுபவத்துடன் அரசு, அரச கூட்டுத்தாபனம், சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனத்தின் நிர்வாகத்தில் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவு.

**உள்வாரி:**

மேலே குறிப்பிட்டுள்ள தேவையான கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளுடன் பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் கனிஷ்ட நிறைவேற்றுநர் (JM 1-1) பதவியில் குறைந்தபட்ச 03 வருடங்கள் திருப்திகரமான சேவையைக் கொண்டுள்ள பணியாளர்கள்.

**அத்துடன்**

நிறுவன இலக்குகளை அடைய பலதரப்பட்ட குழுக்களை வழிநடத்தும் மற்றும் தலைமைத்துவத் திறன் மற்றும் மனித மற்றும் பிற வளங்களை நிர்வகித்தல்

**சம்பள அளவு :** MM 1-1 : ரூ 53,175- 10x1375 + 15x1910 = 95,575/-

**வயதெல்லை:** 30 வயதுக்கு குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். அரசு, அரச கூட்டுத்தாபனங்கள், சபை மற்றும் உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல

### பெறுகை முகாமையாளர் பதவி - MM 1-1

**வேலை விவரம்/ முக்கிய பொறுப்பு பரப்புகள்:**

பெறுகைப் பிரிவின் தலைவர் என்ற வகையில், பிரிவின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் கடமைகளை திறமையாகச் செய்ய வேண்டும் மற்றும் பிரிவு ஊழியர்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

**நியமனத்தின் தன்மை:** கூறப்பட்ட பதவிக்கு லங்கா சோல்ட் லிமிடெட் ஊழியர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட நன்மைகளுக்கான உரிமையுடன் நிரந்தர பதவி.

**தேவையான தகைமை மற்றும் அனுபவம்**

**வெளி விண்ணப்பதாரர்கள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம், B.com, BSc (பொது/ வர்த்தகம்) நிர்வாகம் ஆகியவற்றில் பட்டம் அல்லது தொடர் வழங்கல் முகாமைத்துவம் (Supply Chain Management) / பெறுகைத் துறையில் அனுபவம் உள்ள ஏதேனும் ஒரு விடயப்பரப்பு மற்றும் வழங்கல் மற்றும் பெறுகை முகாமைத்துவ நிபுணத்துவ நிறுவனத்தால் வழங்கப்பட்ட சமமான தகைமை.

**மற்றும்**

இந்த பதவிக்கு ஒரு கூட்டுத்தாபனம், சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் நிரூபிக்கப்பட்ட சாதனையுடன் நிர்வாக மட்டத்தில் கொள்முதல்/பெறுகையில் ஆகக் குறைந்தது 03 வருட கால அனுபவம்.

**உள்ளக அபேட்சகர்கள்:**

மேலே குறிப்பிட்டுள்ள தேவையான கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளுடன் பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் கனிஷ்ட நிறைவேற்றுநர்" (JM 1-1) பதவியில் குறைந்தபட்ச 03 வருடங்கள் திருப்திகரமான சேவையைக் கொண்டுள்ள பணியாளர்கள்.

**அத்துடன்**

நிறுவன இலக்குகளை அடைய பலதரப்பட்ட குழுக்களை வழிநடத்தும் மற்றும் தலைமைத்துவத் திறன் மற்றும் மனித மற்றும் பிற வளங்களை நிர்வகித்தல்

**சம்பள அளவு :** MM 1-1 : ரூ 53,175- 10x1375 + 15x1910 = 95,575/-

**வயதெல்லை:** 30 வயதுக்கு குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். அரசு, அரச கூட்டுத்தாபனங்கள், சபை மற்றும் உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல

### விற்பனை மேற்பார்வையாளர் - MA4

**வட மாகாணத்திற்கு**

**முக்கிய பொறுப்பு பரப்புகள்:**

உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் மற்றும் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் துறை செயற்பாடுகளின் நோக்கங்களைப் பூர்த்தி செய்தல் என்பவற்றுக்கு சந்தைப்படுத்துதல் மேம்பாட்டு முகாமையாளர் மற்றும் தேசிய விற்பனை முகாமையாளருக்கு உதவுதல் மற்றும் உயர் அதிகாரிகளின் வழிகாட்டுதல்களுடன் ஒதுக்கப்பட்ட பணியை நிறைவேற்றுதல்.

**தேவையான கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்**

- வர்த்தக பாடப்பரப்பில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தி.
- SLIM/SIM என்பவற்றின் பகுதித் தகைமை அல்லது அதற்குச் சமமான தகைமை
- தமிழ் மொழியில் பேசும் மற்றும் எழுதும் அறிவாற்றல் அவசியமாகும்.
- சிங்கள / ஆங்கில மொழிகளில் பேசும் மற்றும் எழுதும் அறிவாற்றல் மேலதிகத் தகைமையாகும்.
- இயைபுடைய துறையில் 5 வருட கால வேலை அனுபவம்.

**சம்பள அளவு:**

ரூபா 32,000 - 10x445 + 11x600 + 10x730 + 5x750 = 54,960 (MA-4)

**வயதெல்லை:** 20 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். அரசு, அரச கூட்டுத்தாபனங்கள், சபை மற்றும் உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல

31 ஜூலை 2022 அன்று அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு, உறவினரல்லாத இரு சான்றுபகர்வோரின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் சுயதரவுகள் (CV) மற்றும் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும். கடித உறையின் மேல் இடது மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடவும்.

வெற்றிடங்கள் அல்லது அதன் ஒரு பகுதியை நிரப்புவதற்கு நிறுவனத்தின் பணிப்பாளர் சபை முழுமையான உரிமையை தன்னத்தே கொண்டுள்ளது.

தபால் சேவையில் நிலவும் சிக்கல் காரணமாக, விண்ணப்பத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி மற்றும் சுய தரவுகளை (ஊஏ) பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் கட்டாயமாகும்.

**janakagunawardana@yahoo.com**

**தலைவர்**
**லங்கா சோல்ட் லிமிடெட்,**
**மஹாலேவய, ஹம்பாந்தோட்டை.**
**தொலைபேசி: 047-2037305**


# புஸல்லாவை, காச்சாமலை பஸ் விபத்தில் இருவர் நசுங்கி பலி;

## பலர் படுகாயம்,'நிவுட்டலில்' வந்ததாலேயே விபரீதம்





**தெல்தொட்ட தினகரன்,ஹற்றன் சுழற்சி நிருபர்கள்**

புஸல்லாவை, காச்சாமலை வீடன் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் மரணமடைந்து மேலும் சிலர் காயமடைந்துள்ளனர். ஆத்திர மடைந்த மக்கள் பஸ்ஸையும் தீயிட்டு கொளுத்தியுள்ளனர்.

புஸ்ஸலாவ, பெரட்டாசி தோட்டத்திலிருந்து, புஸ்ஸலாவை நகரத்துக்கு பயணிகளை ஏற்றிவந்த பஸ்ஸொன்றே, வீடன் பகுதியில் வைத்து குடை சாய்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் மதிபலகையில் பயணித்த இருவரே, பஸ் மண்டிட்டில் சாய்ந்ததால், அதில் சிக்குண்டு பலியாகியுள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் பெரட்டாசி தோட்டத்தில் வசிக்கும் சுரேன்ஜித் புஷ்பகுமார் (39 வயது) மற்றும் ஹெல்போட 7ம் கட்டை தோட்டத்தில் வசிக்கும் விஜயகுமார் கவிஷ்கர் (20 வயது) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுமார் 80 பேர் வரை பஸ்ஸில் பயணித்துள்ளனர், அதிகளவான பயணிகளை ஏற்றிக்கொண்டு 'நிவுட்டலில்' வந்ததாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது, பலர் புட்போட்டிலும் தொங்கிக்கொண்டு பயணித்துள்ளனர்.

சிறு காயங்களுக்குள்ளானவர்கள் ஆரம்பக்கட்ட சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் புஸல்லாவை, வகுவப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

விபத்து சம்பவத்தால் ஆத்திரமடைந்த மக்கள், பஸ்ஸை தீயிட்டு கொளுத்தியுள்ளனர். பெரட்டாசி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். பஸ் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.


## அறிவித்தல்

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நுகேகொட ஜம்புகஸ்முல்ல மாவத்த, இல.89A இல் வசித்த, தற்போது பிரான்ஸ், 78230 Le pecq, Escalier B, No.13 Avenue charles De Gaulle இல் தற்போது வசிக்கும் தீயகஹகே மஹிந்த ஸ்ரீலால் டி சில்வா (தே.அ.அ.இல.562481354V மற்றும் கடவுச்சீட்டு இல N2387177) ஆகிய நான் பொரலஸ்கமுவ, ரத்னபிட்டிய, ஸ்கூல் லேன், இல-19, "ஸ்ரீயானி" ஐச் சேர்ந்த ராஜபக்ஷ முதியன்சேலாகே வத்தேகெதர ரோஹன திலக் பண்டார விஜேரத்ன, (தே.அ.அ.இல 543550574V) இற்கு என்னால் வழங்கப்பட்ட பிரான்ஸ் தூதுவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பக்கம்\பாகம் 160/61 மற்றும் தினப்புத்தகம் இல.1005 இல் எழுத்துமூல அதிகாரமுடைய பதிவில் பதிவு செய்யப்பட்ட 2014.12.01 திகதியிடப்பட்ட விசேட அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்வதாகவும் அது செயற்பாடற்றது எனவும் இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது. அத்துடன் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதாவது அதிகாரத்தை பயன்படுத்தி சொல்லப்படட ராஜக்ஷ முதியன் சேலாகே வத்தேகெதர ரோஹன திலக்க பண்டார விஜேரத்னவினால் மேற்கொள்ளப்படும் எந்த விடயங்களுக்கும் நான் பொறுப்பாகமாட்டேன்


## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

2022ஆம் ஆண்டு மே மாதத்திற்காகப் பின்வரும் சம்பளச் சபைகளின் முடிவுகளினால் மேவப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடைத்தான சம்பள விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**பீ.கே.பிரபாத் சந்திரகீர்த்தி**
**தொழில் ஆணையாளர் அதிபதி**

தொழில் திணைக்களம்
கொழும்பு - 05
2022ஆம் ஆண்டு யூன் மாதம் 30ஆம் திகதி

| | |
|---|---|
| **கொக்கோ, ஏலக்காய், மிளகு என்பன வளர்த்தல் மற்றும் உற்பத்தி தொழில்** | **வேலையாள் ஒரு நாளுக்கு ரூ.1304.04** |

இதற்கு மேலதிகமாக 2005ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க வரவு, செலவு திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் மற்றும் 2016ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வரவு, செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை ஒவ்வொரு தொழில்தருநரும் குறித்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

## 1964 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டப்படி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட 28இன் 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது தொடர் இலக்கம் :-
RPDS/LND/09/ACQ/15/(CEB)

காணி அமைச்சு தொடர் இல:
4-3/2/2016/ CEB/401

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகள் அரசாங்கத்தினால் சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 2018 ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதிய 2102/23 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியை (III) பார்வையிடவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : சப்ரகமுவ |
| மாவட்டம் | : இரத்தினபுரி |
| பிரதேச செயலாளர் பிரிவு | : இரத்தினபுரி |
| கிராம அலுவலகப் பிரிவு | : 164, கல்லேல்ல |
| கிராமத்தின் பெயர் | : நுகேபொல |
| காணியின் பெயர் | : கலபொடவத்த |
| ஆரம்ப வரைபட இலக்கம் | : இ.கி.வ.இல.406 |
| துண்டு இல | : 377 |
| விஸ்தீரணம் | : ஹெக். 1.4489 |

**2022 ஆம் ஆண்டு 07 மாதம் 11ஆம் திகதி**

**பிரதேச செயலாளர் அலுவலகம்**
**இரத்தினபுரி**


**மேல் மாகாண வீதிப் பயண போக்குவரத்து அதிகாரசபை**

**கால அட்டவணை தேவைகளை பூர்த்தி செய்ய வழக்கமான பயணிகள் சேவை அனுமதிகளை வழங்குதற்கு கேள்விப்பத்திரம் நீடிப்பதற்கான அறிவித்தல்**

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்து சிரமங்கள் காரணமாக, 15.06.2022 அன்று வெளியிடப்பட்ட **'கால அட்டவணை தேவையை பூர்த்தி செய்ய வழக்கமான பயணிகள் சேவை அனுமதிகளை வழங்குதல்'** அறிவிப்பில் டெண்டர்கள் வழங்குதல், டெண்டர்களை ஏற்றுக்கொள்வது மற்றும் டெண்டர்களை திறப்பதற்கான தேதிகள் கீழ்க்கண்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது.

| விபரம் | திகதி | நேரம் |
|---|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்குதல் | 2022.07.25 | பிற்பகல் 3.00 மணிவரை |
| கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளுதல் | 2022.07.26 | பிற்பகல் 1.00 மணிவரை |
| கேள்விப்பத்திரம் திறப்பு | 2022.07.26 | பிற்பகல் 1.00 மணிக்கு |

ஏனைய கேள்வி நிபந்தனைகள் மாறுப்படாது.

ஓ.டப்ள்யு.பிரசன்ன சஞ்சீவ
தலைவர்,
சாலை சேவை அனுமதி டெண்டர் குழு,
மேல் மாகாண வீதிப் பயண போக்குவரத்து அதிகார சபை,
எண். 89, ரன்மகபாய, கடுவெல வீதி, பத்தரமுல்லை.
011 2887872

## அற்றோணித்தத்துவத்தை இல்லாதொழித்தல்

நுகேகொட, கங்கொடவில, விஜேராம, ஹைலெவல் வீதி, 513/1/1, ஆம் இலக்கத்தைச் சேர்ந்த துஷாரா பிரியங்கனி பஸ்செல்ல தி.மு. துஷாரா பிரியங்கனி ராஜபக்ஷ மற்றும் மொஹமெட் துவான் பஸ்செல்ல ஆகிய நாமிருவரும் அமெரிக்க ஐக்கிய நாடுகள், வேர்ஜினியா என்ற முகவரியின் பிரசித்த நொத்தாரிஸ் Rupinder K Singh என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2010 ஜூலை 27 ஆம் திகதியிடப்பட்டதும் நுகேகொட, கங்கொடவில, விஜேராம, ஹைலெவல் வீதி, 513/1/, ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ராஜபக்ஷ வித்தானகே சுமேதா அருண ராஜபக்ஷ என்பவருக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு விஷேட அற்றோணித்தத்துவமானது இத்தால் இரத்துச் செய்யப்பட்டு மற்றும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

**துஷாரா பிரியங்கனி பஸ்செல்ல தி.மு. துஷாரா பிரியங்கனி ராஜபக்ஷ மொஹமெட் துவான் பஸ்செல்ல**

## பகிரங்க தங்க நகை ஏல விற்பனை

வ/ப நவ வலப்பனே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ராகல/முங்வத்த/மத்துரட்ட/உடபுசல்லாவ/நில்தண்டாஹின்ன/எமஸ்ட்/ஹைபொரஸ்ட்/மஹகுடுகல/வலபனே மற்றும் எதரீபெஹெ ஆகிய கிராமிய வங்கிகளில் 2018.09.01 முதல் 2021.02.28 வரை அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத தங்க நகைகள் 2022.07.31 மு.ப.9.00 முதல் வ/ப நவ வலப்பனே பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அலுவலக கூட்ட மண்டபத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**பொது முகாமையாளர்**
**தொலைபேசி இல - 0522279205**
**0522279638**
**பெக்ஸ் - 0522279638**

# நகர்வலம்



# எரிபொருள் தட்டுப்பாட்டினால் நீர்ப்பம்பிகள் செயலிழந்து, உப்பு உற்பத்திகள் கடும் பாதிப்பு

**வனாத்தவில்லு குறூப் நிருபர்**

புத்தளம் உட்பட பல பிரதேசங்களில் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக, தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

உற்பத்திக்குத் தேவையான நீரை விநியோகிக்கும் நீர்ப்பம்பிகளை இயக்குவதற்கு போதிய எரிபொருள் இல்லாததாலே,இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தொழில்துறையினர் விசனம் தெரிவிக்கின்றனர்.புத்தளம் உப்பு வெளியில், நாலாயிரம் ஏக்கரில் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்குத் தேவையான நீர்,பம்பிகள் மூலமே விநியோகிக்கப்படுகிறது.

ஆனால், நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான எரிபொருள் நெருக்கடியால் நீர்ப்பம்பிகளை இயக்குவதற்கு எரிபொருள் இல்லாதுள்ளது.

இதனால்,தொழிற்சாலைகள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் தொழில்துறையினர் கூறுகின்றனர்.



இங்கு உற்பத்தி செய்யப்படும் உப்பு நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. இம்முறை ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியால், உப்பு உற்பத்தி முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனால், விரைவில் சந்தையில் உப்புக்கு அதிக கிராக்கி ஏற்பட்டு, உப்புக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்படும் எனவும், தொழில்துறை வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தொழில் மூலம் 10,000 குடும்பங்கள் நன்மையடைகின்றன. ஆனால் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியால், கூலி கொடுக்க முடியாமல் முதலாளிமார்கள் கடும் நிதி நெருக்கடியில் உள்ளதாகவும் கூறப்படுகிறது. இம்முறை சிறிதளவு அறுவடை செய்யப்பட்ட உப்பை ஏற்றிச் செல்வதற்கு லொறிகளுக்குத் தேவையான டீசலும் கிடைக்கவில்லை. இதனால், உப்பை சந்தைக்கு கொண்டு செல்வதில் பல சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் இவர்கள் கூறுகின்றனர்.





பேருவளை ரியாளுஸ்ஸாலிஹீன் பள்ளிவாசலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஹஜ் பெருநள் தொழுகையில், கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை படங்களில் காணலாம். படங்கள்: பேருவளை விஷேட நிருபர்

# யூனானி ஆயுர்வேத வைத்தியசாலை அமைப்பது தொடர்பில் கலந்துரையாடல்



**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் நகரசபையின் உத்தேச இலவச யூனானி ஆயுர்வேத வைத்தியசாலை வேலைத்திட்டம் சம்பந்தமான கலந்துரையாடல் (07) நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் தலைமையில், நடைபெற்றது.

புத்தளம் நகரசபை காரியாலயத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், வைத்தியர் எம்.எஸ். முனவ்வர் தலைமையில் வைத்திய குழுவினர் கலந்துகொண்டனர். இந்த வைத்தியத் துறைக்குத் தேவையான மூலிகைத் தோட்டத்துக்கான காணி, நகரசபையால் வழங்கப்பட்டுள்ளதாக நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் தெரிவித்தார்.

மேலும் தற்போதைய நெருக்கடி நிலைமையைக் கருத்திற்கொண்டு, நடமாடும் ஆயுர்வேத வைத்திய முகாம் நடாத்துவது சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில், நகரசபை உறுப்பினர்கள் ரனீஸ் பதுர்தீன்,ஜௌபர் மரைக்கார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# புத்தளம் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நேற்று திங்கட்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை, தொடர் பணிபகிஷ்கரிப்பை ஆரம்பத்துள்ளனர்.

பொதுநிருவாக நிர்வாக அமைச்சு கடந்த வாரம் (06) வெளியிட்ட சுற்று நிருபத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும், தமக்குத் தேவையான எரிபொருள் வழங்க கோரியுமே இவர்கள், இந்த சமுர்த்தி பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்தியாவசிய சேவைகளை முன்னெடுத்து வரும் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எரிபொருளின்றி சிரமங்களை எதிர்நோக்குவதாகவும், இதனால் அவர்களுக்குத் தேவையான எரிபொருளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு கோரி கடந்த (06) பொதுநிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும், பிரதேச செயலாளர்களுக்கும் அறிவித்திருந்தார்.

இதற்கு தமது எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில், நாடு முழுவதும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நேற்று முதல் தொடர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய, இது இடம்பெறுகிறது.

இப்பணிப்பகிஷ்கரிப்பு தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர், பொதுநிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர், சமுர்த்தி பணிப்பாளர், அனைத்து மாவட்ட செயலாளர்கள் மற்றும் அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையை கவனத்தில் கொள்ளாமல் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக காலம், நேரம் பாராது வங்கி மற்றும் கிராமங்களில் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் எரிபொருள் பிரச்சினை இருப்பதாக சுட்டிக்காட்டிய புத்தளம் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தங்களை மலினப்படுத்தும் வகையில் கண்டுகொள்ளாமல் இருப்பதும் வேதனையளிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனினும், இந்த தீர்மானம் பொது மக்களை பழிவாங்கும் நோக்கமல்ல என்றும், தமக்கு தேவையான எரிபொருளை கோருவதே நோக்கேமென்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு புத்தளம் மாவட்ட அனைத்து சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் நேற்று முதல் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்து வரும் நிலையில், சமுர்த்தி முகாமையாளர்கள் பணிக்கு சமூகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனால், நேற்றைய தினம் (திங்கட்கிழமை) சமுர்த்தி வங்கிகள் முகாமையாளர்களினால் திறக்கப்பட்ட போதிலும், அங்கு உத்தியோகத்தர்கள் சமுகமளிக்காததால் வங்கி செயற்பாடுகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்தன.

இதனால், சமுர்த்தி வங்கிக்கு வருகை தந்த பொதுமக்கள் திரும்பிச் சென்றமையை அவதானிக்க முடிந்தது.

# நாச்சியாதீவு பிரதேச மக்கள் இணைந்து ஹஜ்ஜுப் பெருநாளில் விஷேட பிரார்த்தனை

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்ட நாச்சியாதீவு ஜும்மா பெரிய பள்ளிவாசலில் பிரதேச முஸ்லிம் ஆண்கள்,பெண்கள்,சிறுவர்கள் இணைந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை (10) 'ஈதுல் அழ்ஹா' புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையில் ஈடுபட்டனர்.பள்ளிவாசலின் திறந்த வெளிப்பகுதி மற்றும் பள்ளிவாசலின் உட்பகுதியிலும் பெருநாள் தொழுகை, குத்பா பிரசங்கம் ஆகியன இடம் பெற்றன.

(நாச்சியாதீவு குசவை, பாண்டியன்குளம், புதியநகர், இடம் பெயர்ந்தோர் முகாம் ஆகிய பகுதிகளைச்சேர்ந்த அனைவரும் இங்கு நடைபெற்ற பெருநாள் தொழுகை மற்றும் குத்பா பிரசங்கங்களில் கலந்து கொண்டனர். அதிகாலை



வேளையிலேயே பெருநாள் தொழுகை இங்கு இடம் பெறுவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் நிர்வாகசபை மேற்கொண்டிருந்தது.

ஹஜ்ஜின் மகத்துவம், கூட்டு உழ்ஹிய்யா, பெருநாளின் சிறப்புகள், சமூக ஒற்றுமை, இன நல்லுறவு, சக வாழ்வு போன்ற கருப்பொருளில் குத்பா பேருரைகள் அமைந்திருந்தன.நாட்டில் அமைதி நிலவ வேண்டுமென விஷேட துஆ பிரார்த்தனைகளும் நிகழ்த்தப்பட்டன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பெரும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் புனித ஹஜ் பெருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

# மோதலில் காயமடைந்து உயிருக்கு போராடிய யானையின் கொம்பு கள்வர்களால் அபகரிப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**



யானைகளுக்கிடையில் நடந்த பாரிய சண்டையில் கடுங்காயத்திற்குள்ளான யானையின் ஒரு கொம்பை இனந்தெரியாத ஒரு குழுவினர், கோடாரியால் வெட்டி எடுத்துச் சென்றுள்ளதாக அநுராதபுரம் வனவிலங்கு வைத்திய அதிகாரி சந்தன ஜயசிங்க தெரிவித்தார்.

காயமடைந்த நிலையில், கெப்பித்திக்கொல்லாவ தித்தகோனேவ மொரஓய வயல் பகுதியில் விழுந்து கிடந்த யானையின் கொம்பையே, இக்குழுவினர் வெட்டி எடுத்துச் சென்றுள்ளனர்.

கெபித்திகொல்லாவ தபடவெவ பகுதிக்கு அருகாமையிலுள்ள காட்டில் இரு யானைகள் பெரும் சமரில் ஈடுபட்டுள்ளது.இதனால், காயத்திற்குள்ளாகி உயிருக்காக போராடிய குறித்த யானைக்கு வனவிலங்கு அதிகாரிகள் சிகிச்சையளித்து வருகின்றனர். இந்த யானைக்கு, சுமார் மூன்று வாரங்களாக சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் வனவிலங்கு வைத்தியர் சந்தன ஜயசிங்க மேலும் தெரிவித்தார்.

# பெற்றோல் பெற்றுத் தருவதாக கூறி 1,64,500 ரூபா மோசடி

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

பெற்றோல் பெற்றுத்தருவதாகக் கூறி 1,64,500 ரூபா பணத்தை மோசடிசெய்த இரு சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக பூநேவ பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விருவரும் கடந்த (06) இல், கைதுசெய்யப்பட்டனர். மதவாச்சி புகையிரத வீதி பூநேவ முகவரியைச் சேர்ந்த இருவரே இச்சம்பவத்தில், கைது செய்யப்பட்டவர்களாவர்.

புத்தளம் பகுதியைச்சேர்ந்த ஒருவருக்கு மதவாச்சி குடாவெவ பகுதியில் இரகசியமாக பெற்றோல் பெற்றுத்தருவதாக கூறிய இவர்கள், இதற்காக 1,64,500 ரூபா பணத்தையும் பெற்றுள்ளனர்.

பின்னர், பணம் வழங்கிய நபருக்கு பெற்றோல் வழங்காமல் இவ்விருவரும் தலைமறைவாகினர்.



கல்பிட்டி வீதி முதலைப்பாளி தாருல்உலூம் காஷிபுல் ஹுதா அரபுக் கல்லூரியின் மூன்றாவது அல்ஹாபிழ், அல்ஆலிம் பட்டமளிப்பு விழா, அண்மையில் கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது. கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் ஏ.டபில்யூ.எம். ஜமீல்கான் (ரஹ்மானி) மற்றும் பிரதம அதிதிகளில் ஒருவராக கலந்து கொண்ட புத்தளம் மாவட்ட ஜம்இயத்துல் உலமா தலைவர் அஷ்ஷெய்க் அப்துல்லா மஹ்மூத் ஆலிம் ஆகியோர் மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைப்பதை படங்களில் காணலாம். (படங்கள்: புத்தளம் தினகரன் நிருபர்)




அவுஸ்திரேலியாவிலுள்ள இலங்கை சொலிடாரிட்டி அமைப்பினர் அண்மையில் (09) நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரியும், உறுதியான அரசியல் ஸ்திரத்தை ஏற்படுத்துமாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவுஸ்திரேலியாவின் ஸ்ரேட் நூலக முன்றலில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை படத்தில் காணலாம்.



# அவுஸ்திரேலிய அணிக்கெதிரான 2 வது டெஸ்ட்: இலங்கை அணி இன்னிங்ஸ், 39 ஓட்டங்களால் வெற்றி!



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்கெதிரான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில், இலங்கை அணி இன்னிங்ஸ் மற்றும் 39 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர், 1–1 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்துள்ளது.

காலி சர்வதேச மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி, முதல் இன்னிங்ஸிற்காக 364 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதில் அணியின்




அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஸ்டீவ் ஸ்மித் ஆட்டமிழக்காது 145 ஓட்டங்களையும் லபுஸ்சேகன் 104 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். இலங்கை கிரிக்கெட் அணியின் பந்து வீச்சில், பிரபாத் ஜயசூரிய 6 விக்கெட்டுகளையும் ராஜித 2 விக்கெட்டுகளையும் ரமேஷ் மெண்டிஸ் மற்றும் மகேஷ் தீக்ஷன ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி, 554 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, தினேஷ் சந்திமால் ஆட்டமிழக்காது 206 ஓட்டங்களையும் கருணாரத்ன 86 ஓட்டங்களையும் குசல் மெண்டிஸ் 85 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், ஸ்டார்க் 4 விக்கெட்டுகளையும் ஸ்வெப்சன் 3 விக்கெட்டுகளையும் லியோன் 2 விக்கெட்டுகளையும் கம்மின்ஸ் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

190 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்ரேலிய அணி, 151 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், இலங்கை அணி இன்னிங்ஸ் மற்றும் 39 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, மார்னஸ் லபுஸ்சேகன் 32 ஓட்டங்களையும் உஸ்மான் கவாஜா 29 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சில், பிரபாத் ஜயசூரிய 6 விக்கெட்டுகளையும் மகேஷ் தீக்ஷன மற்றும் ரமேஷ் மெண்டிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
44th
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..........
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..........
வாக்களித்தவர் பெயர் : ..........
முகவரி : ..........
மொபைல் இல. : ..........

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 16-07-2022 இல. 16




# சட்டத்தரணிகள் அணி வெற்றி

யாழ்.விசேட நிருபர்

வடமாகாண சட்டத்தரணிகள் கிரிக்கெட் அணியினருக்கும் வடமாகாண வைத்தியர் கிரிக்கெட் அணியினருக்குமிடையிலான கிரிக்கெட் போட்டியில் சட்டத்தரணிகள் அணி வெற்றி பெற்றது.

சட்டத்தரணிகள் அணிக்கு நீதிபதி அந்தோனிப்பிள்ளை யூட்சனும், வைத்தியர் அணிக்கு புற்றுநோய் சத்திரசிகிச்சை நிபுணர் கணேசமூர்த்தி சிறிதரனும் தலைமை தாங்கினர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற இப்போட்டியில் வைத்தியர் அணி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

நிர்ணயிக்கப்பட்ட 35 பந்து பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 206 ஓட்டங்களை வைத்தியர் அணி பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் அணித்தலைவர் வைத்தியர் கணேசமூர்த்தி சிறிதரன் 39 ஓட்டங்களையும்,வைத்தியர் ரஜீவ் நிர்மலசிங்கம் 32 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சட்டத்தரணிகள் அணி சார்பில் சட்டத்தரணி த.அஞ்சனன் 3 விக்கெட்டுக்களையும், சட்டத்தரணி




இராசையா இளங்குமரன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 207 ஓட்டங்களை இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய சட்டத்தரணிகள் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 20.3 பந்து பரிமாற்றங்களில் 207 ஓட்டங்களை பெற்று வெற்றியை பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் சட்டத்தரணி வி. மணிவண்ணன் (யாழ்.மாநகர முதல்வர்) அதிரடியாக 72 ஓட்டங்களையும் சட்டத்தரணி த. அஞ்சனன் அபாரமாக 40 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் வைத்தியர் அணி சார்பில் வைத்தியர் கௌரிபாகன் 2 விக்கெட்டுக்களையும், வைத்தியர் ரஜீவ் நிர்மலசிங்கம் 1 விக்கெட்டையும் சாய்த்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாகவும் சிறந்த பந்துவீச்சாளராகவும் சகல துறைகளிலும் பிரகாசித்த சட்டத்தரணி த. அஞ்சனன் அவர்களும் சிறந்த களத்தடுப்பாளராக வைத்தியர் ரஜீவ் நிர்மலசிங்கம் அவர்களும் சிறந்த துடுப்பாட்ட வீரராக வி. மணிவண்ணனும் தெரிவு செய்யப்பட்டனர்.

# "இம்ரான் பிரீமியர் லீக்– 05" தொடரின் இறுதி போட்டிக்கு தகுதிபெற்றது சாய்ந்தமருது விளாஸ்டர் கழகம்

சவளக்கடை குறூப் நிருபர்

நிந்தவூர் இம்ரான் விளையாட்டு கழகம் ஐந்தாவது தடவையாகவும் ஏற்பாடு செய்த கிழக்கு மாகாண 32 முன்னணி கழகங்கள் பங்குபற்றும் "இம்ரான் பிரீமியர் லீக் 05ம் சீசன்" 20 க்கு 20 கடினபந்து கிரிக்கட் சுற்றுத்தொடரின் இறுதியாட்டத்திற்கு சாய்ந்தமருது விளாஸ்டர் விளையாட்டுக்கழகம், கல்முனை ஜிம்கானா விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி முதல் அணியாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நிந்தவூர் பொதுவிளையாட்டு மைதானத்தில் செவ்வாய்க்கிழமை மாலை இடம் பெற்ற அரையிறுதி போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று கல்முனை ஜிம்கானா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடிய சாய்ந்தமருது விளாஸ்டர் விளையாட்டுக்கழகம் முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயித்த 20 ஓவர்களில் 140 ஓட்டங்களை 08 விக்கட்டுக்களை இழந்து பெற்றுக்கொண்டது. அதிரடியாக துடுப்பெடுத்தாடிய விளாஸ்டர் விளையாட்டுக்கழக வீரர் ஏ.என்.எம். ஆபாக் 32 பந்துகளை



எதிர்கொண்டு 41 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். அடுத்தபடியாக மேலும் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய அணித்தலைவர் எம்.ஜே.எம். தாஜுதீன் 19 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

அதனடிப்படையில்141 எனும் வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கல்முனை ஜிம்கானா விளையாட்டுக்கழகம் ஆரம்பத்தில் விக்கட்டுக்களை இழந்து தடுமாறினாலும் மத்தியதர வரிசை வீரர்களின் நிதான மற்றும் அதிரடி துடுப்பாட்டத்தின் காரணமாக 19.2 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 120 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டனர்.

# கடற்கரை கபடி போட்டியில் நாவிதன்வெளி அணி வெற்றி

காரைதீவு குறூப் நிருபர்

அம்பாறை மாவட்ட விளையாட்டு விழாவில் பெண்களுக்கான கடற்கரை கபடி போட்டி காரைதீவு கடற்கரையில் நேற்று நடைபெற்றது. அங்கு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவு அணி சாம்பியன் கிண்ணத்தையும் றன்னஸ் அப் இடத்தினை கல்முனை பிரதேச செயலாளர் அணியும் பெற்றுக்கொண்டது.





நுவரெலியா கல்வி வலயத்திற்குட்ட பாடசாலைகளுக்கிடையில் இடம் பெற்ற வலய மட்ட கரப்பாந்தாட்ட போட்டிகளில் 16,18 மற்றும் 20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கிடையில் இடம்பெற்ற கரப்பந்தாட்ட போட்டிகளில் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய அணி முதலாம் இடங்களை பெற்று மத்திய மாகாணத்தில் இடம்பெறவுள்ள மாகாண மட்ட போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளன. தலவாக்கலை குறூப் நிருபர்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜுலை மாதம் 12ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.